# மள்ளர் மலர்

ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் ✽ மலர் 12 ✽ இதழ் 5 ✽ மே 2006


# ஐந்தாவது முறையாக கலைஞர் முதலமைச்சர் ஆனார்



## மே 2006 – மள்ளர் மலர் – பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| புதிய தமிழ்நாடு அரசு - 2006 | 3 |
| தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - மே 2006 | 4 |
| தேவேந்திரர் ஓட்டு - தேர்தலுக்குப் பிந்திய கணிப்பு | 7 |
| இதர மாநிலத் தேர்தல்கள் | 7 |
| தமிழ்நாடு புதிய அமைச்சரவை | 8 |
| தமிழகத்தில் புதிய கற்கால கல்கோடாரி | 9 |
| தமிழ்நாடு தேர்தல் 2006 - கட்சிகள் பெற்ற வாக்குகள் சதவீதம் | 9 |
| பா.ஜ.க. - அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகக் கூட்டணி ஒப்பந்தம் | 10 |
| அன்புள்ள ஆசிரியருக்கு | 12 |
| இலக்கியத் தொடர் - செங்கோட்டுப் பள்ளு | 15 |
| உறுதி தருவது பதவி - மெர்வின் | 19 |
| சங்ககாலத் தமிழகம் கல்வியிற் சிறந்திருந்தது - 2300 ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டு | 23 |


## 1996, 2001, 2006 தேர்தல்களில் தேவேந்திரர் அதிகமாக வாக்களித்த கட்சியே வெற்றி பெற்றுள்ளது

தமிழ்நாட்டில் தேவேந்திரர்கள் ஒரு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட பெரிய சமுதாயமாக உள்ளனர். தேவேந்திரர்களின் எண்ணிக்கை வலிமையைத் தேர்தல்கள் காட்டினாலும் தேவேந்திரர்களும் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உணர்வதாகத் தெரியவில்லை.

1991 முதல் 1996 வரை தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த செல்வி ஜெயலலிதாவின் ஆட்சி 1995 இல் தேவேந்திரர்கள் மீதான வன்முறையை ஏவிவிட்டு கொடியங்குளம் அட்டூழியத்தை அரங்கேற்றியது. வெகுண்ட தேவேந்திரர்கள் 1996 இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக கலைஞர் கருணாநிதியின் தி.மு.க.விற்கு முழுமையாக வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர்.

1996 இல் வெற்றி பெற்ற கலைஞரின் தி.மு.க. வெற்றி பெற ஓட்டளித்த தேவேந்திரர்கள் மீதே வன்முறையை ஏவிவிட்டு கயத்தாறு, தாமிரபரணிக் கொலைகள் முதலிய செயல்களைச் செய்தது. இதன் காரணமாக அடுத்த 2001 தேர்தலில் தேவேந்திரர்கள் ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வுக்கு பெரும்பான்மையான வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்தனர். ஜெயலலிதாவும் அ.தி.மு.க.வும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்களும் தேவேந்திரர்களை புறக்கணித்தனர். ஏன் எதிரிகளாகக் கூடப் பார்த்தனர். அதன் பலனாக 2006 தேர்தலில் அ.தி.மு.க. மண்ணைக் கவ்வியது. காரணம் பெரும்பான்மையான தேவேந்திரர்கள் கருணாநிதியின் தி.மு.க.வுக்கு வாக்களித்தனர்.

தமிழ்நாட்டின் வடபகுதியிலிருந்து தெற்கே செல்லச் செல்ல தி.மு.க. அணிக்கு அதிக ஓட்டுகளும் வெற்றிகளும் கிடைத்துள்ளன என இந்து நாளிதழ் கூறுவது தேவேந்திரர் அதிக அளவில் தி.மு.க. அணிக்கு வாக்களித்துள்ளனர் என்பதையே குறிக்கிறது. மேலும் தேவேந்திரர்களும் வன்னியர்களும் அதிக அளவில் தி.மு.க. அணிக்கு வாக்களித்துள்ளனர் எனக் கூறுகிறது இந்து நாளிதழ்.

தேவேந்திரர்களுக்கு எதிராகச் செயல்படும் அரசுகளை வீழ்த்தும் தேவேந்திரர்களின் வலிமையை உணர்ந்து கலைஞரும், தி.மு.க.வும் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளும் வருகிற ஐந்து ஆண்டுகளுக்குத் தங்களுடைய செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். மற்ற சமுதாயங்களைப் போல் தேவேந்திரர்களையும் அடையாளப்படுத்தி அவர்களின் பெருமைமிக்க வரலாறுகளையும் சிறப்புமிக்க பண்பாடுகளையும் பேச வேண்டும்.

## மள்ளரிய ஆர்வலர் பெற்ற சிறப்புகள்

மைய அரசின் பஞ்சாயத்தாட்சித் துறையும், அண்ணாமலைப் பல்கலை அரசியலறிவியல் பிரிவும் இணைந்து ஏப்ரல் 5, 6, 7 தேதிகளில் பஞ்சாயத்தாட்சி பற்றி தேசியக் கருத்தரங்கை நடத்தியது. பஞ்சாயத்துப் பரிணாம வளர்ச்சி என்னும் நூலை எழுதியது கிராம வளர்ச்சியில் காட்டி வரும் ஆர்வத்தால் காந்தி விருது பெற்றது உள்ளிட்டவைகளைக் கருத்தில் கொண்டு இயக்குநர், முனைவர் அ. தனிக்கொடி அவர்கள் நமது மள்ளரிய ஆர்வலர் திரு. சலுப்பை கி. பாஷ்யம் அவர்களைக் கருத்தரங்கிற்கு சிறப்பாக அழைத்தார். நமது ஆர்வலரும் மக்களாட்சியின் அடித்தளம் ஊராட்சிகளே என்று ஆய்வுக் கட்டுரையையும் அளித்தார்.

மேலும் திருப்பூர் மக்கள் மாமன்ற அறக்கட்டளை மூத்தோர் பேராற்றல் என்னும் தலைப்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

நெல்லின் மக்களின் மகுட மணிக் கதிர்

# மள்ளர் மலர்

மலர் 12 இதழ் 5

விடை, திருவள்ளுவர் ஆண்டு 2037

விய - வைகாசி, மே 2006

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 120/-
வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,500/-
தனி இதழ் : ரூ. 10/-



**அலுவலக முகவரி**

10/2 நால்வர் நகர், பாரதியார்
பல்கலைக் கழகம் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 046
தொலைபேசி : 0422-2422287
தொலைநகல் : 0422-2425300
மின்அஞ்சல்: mallarmalar@yahoo.com
இணைய தளம்:
http://www.geocities.com/mallarmalar

**ஆசிரியர்**

முனைவர் குருசாமி சித்தர்
B.E., M.Sc.(Engg), Ph.D. (UConn-USA)

**துணை ஆசிரியர்கள்**

குரு. சித். செந்தில்குமார்
B.E., M.S., (TTU - USA)
மா. ராஜ்குமார் தேவேந்திரர் B.B.M.
மா. சிவக்குமார் தேவேந்திரர் B.E.



தேவேந்திர குல வேளாளர் சங்கத்திற்காக மாமன்னர் அச்சகம், கோவை-46 -இல் திருமதி துளசிமணி மாரியப்பன் அவர்களால் அச்சிடப்பட்டது. வெளியிடுபவர் டாக்டர் குருசாமி சித்தர்


# புதிய தமிழ்நாடு அரசு - 2006

கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலும் இதர கூட்டணிகளின் ஆதரவிலும் புதிய தமிழ்நாடு அமைச்சரவை பதவி ஏற்றுள்ளது. தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் வெளியிலிருந்து ஆதரவு தருகிற கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளிலும் கூறப்பட்டுள்ள கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளிலும் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளை இந்த அமைச்சரவை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவதிலும் பயிற்று மொழி ஆக்குவதிலும் தமிழர் அடையாளங்களை நிறுவுவதிலும் தமிழர் வரலாறுகளையும் பண்பாடுகளை வெளிக்கொண்டு வருவதிலும் இந்த அரசு முனைப்போடும் உண்மையான தீவிரத்தோடும் செயல்பட வேண்டும். தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

அரிசி ஒரு கிலோ இரண்டு ரூபாய் என்ற முடிவினால் விவசாய விலை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயம் பாழ்படும் சூழ்நிலை ஏற்படாமல் இந்த அரசு பாதுகாக்க வேண்டும். ஏற்கனவே இயற்கைச் சீற்றங்களினாலும் வேளாண் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்காமலும் துன்பப்படும் விவசாயிகள் மேலும் துன்பங்களுக்கு ஆளாக்கப்படக் கூடாது.

கல்வி வெறும் வியாபாரப் பொருளாக்கப்பட்டு ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது. இந்த நிலை மாறி எல்லோருக்கும் உயர்கல்வி வாய்ப்புகளை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

தமிழீழச் சிக்கலில் இந்த அரசு தமிழர்களுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசில் ஏற்படுத்த உரிய முயற்சிகளை மேற்கொண்டு தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். வெறும் வாய்ப்பேச்சுக்கள் பலனளிக்காது.

சேர, சோழ, பாண்டியர்களான தமிழ் மூவேந்தர்களின் அடையாளச் சின்னங்களை தமிழ்நாடு முழுவதும் நிறுவ வேண்டும். தமிழர்களின் பழம்பெரும் வரலாறுகளை வெளிக்கொண்டு வர தொல்லியல் துறையும் வரலாற்றுத் துறையும் அதிக நிதி ஒதுக்கீடுகள் பெற வகை செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் பிறமொழிக்காரர்களின் அரசியல், அதிகாரம், ஆதிக்கங்கள், அடையாளங்கள் அகற்றப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயங்களுக்கும் அனைத்துத் துறைகளிலும் உரிய முன்னுரிமைகள் அளிக்கப்பட வேண்டும். தமிழினத் தலைவர் என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இதைச் செய்வார் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நெஞ்சத்தில் மட்டும் இடம் கொடுத்துவிட்டு பந்தியை விட்டு விரட்டும் செயல்பாடுகளை மக்கள் தெரிந்து கொண்டுள்ளார்கள். இதில் பெரிதும் பாதிக்கப்படுகிறவர்கள் மூத்த தமிழ்க் குடியாகிய தேவேந்திரர்கள் தாம்.

இரண்டு அணிகளில் தேவேந்திரர்கள் தி.மு.க. அணிக்கு 24 சதவீதம் கூடுதலாக வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளார்கள் என்பதைத் தி.மு.க. உணர வேண்டும்.

# தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – மே 2006

8.5.2006 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 163 இடங்களைக் கைப்பற்றி வெற்றி கண்டது. அ.தி.மு.க. அணி 69 இடங்களையும் பெற்றது. மொத்த இடங்கள் 234

**தி.மு.க. கூட்டணி வென்ற இடங்கள்**

| | |
|---|---|
| தி.மு.க. | 96 |
| காங்கிரஸ் | 35 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 17 |
| கம்யூனிஸ்டு | 9 |
| இந்திய கம்யூனிஸ்டு | 6 |
| **மொத்தம்** | 163 |

**அ.தி.மு.க. கூட்டணி**

| | |
|---|---|
| அ.தி.மு.க. | 61 |
| ம.தி.மு.க. | 6 |
| விடுதலைச் சிறுத்தைகள் | 2 |
| **மொத்தம்** | 69 |
| **விஜயகாந்த்தின் தே.மு.தி.க.** | 1 |
| சுயேட்சை | 1 |
| **மொத்தம்** | 2 |
| **மொத்தம்** | 234 **தொகுதிகள்** |

## வெற்றி பெற்றவர்கள் பெயர்கள், கட்சி

| | தொகுதி | வெற்றி பெற்றவர் | கட்சி |
|---|---|---|---|
| 1. | அச்சரப்பாக்கம் | சங்கரவல்லி | திமுக |
| 2. | ஆலந்தூர் | அன்பரசன் | தி.மு.க. |
| 3. | ஆலங்குடி | ராஜசேகரன் | சி.பி.ஐ. |
| 4. | ஆலங்குளம் | பூங்கோதை | தி.மு.க. |
| 5. | அம்பாசமுத்திரம் | ஆவுடையப்பன் | தி.மு.க. |
| 6. | அணைக்கட்டு | பாண்டுரங்கன் | அ.தி.மு.க. |
| 7. | அந்தியூர் | குருசாமி | தி.மு.க. |
| 8. | ஆண்டிமடம் | சிவசங்கர் | தி.மு.க. |
| 9. | ஆண்டிபட்டி | ஜெயலலிதா | அ.தி.மு.க. |
| 10. | அண்ணாநகர் | ஆர்காடு வீராசாமி | தி.மு.க. |
| 11. | அறந்தாங்கி | உதயம் சண்முகம் | தி.மு.க. |
| 12. | அரவக்குறிச்சி | கலீலுர் ரஹ்மான் | தி.மு.க. |
| 13. | ஆர்க்காடு | இளவழகன் | பா.ம.க. |
| 14. | அரியலூர் | அமரமூர்த்தி | காங்கிரஸ் |
| 15. | அரக்கோணம் | ஜகன்மூர்த்தி | தி.மு.க. |
| 16. | ஆரணி | சிவானந்தம் | தி.மு.க. |
| 17. | அருப்புக்கோட்டை | தங்கம் தென்னரசு | தி.மு.க. |
| 18. | ஆத்தூர் (திண்டுக்கல்) | பெரியசாமி | தி.மு.க. |
| 19. | ஆத்தூர் (சேலம்) | சுந்தரம் | காங்கிரஸ் |
| 20. | அவிநாசி | பிரேமா | அ.தி.மு.க. |
| 21. | பர்கூர் | தம்பிதுரை | அ.தி.மு.க. |
| 22. | பவானி | ராமநாதன் | பா.ம.க. |
| 23. | பவானிசாகர் | சுப்பிரமணியம் | தி.மு.க. |
| 24. | புவனகிரி | செல்வி ராமஜெயம் | அ.தி.மு.க. |
| 25. | போடிநாயக்கனூர் | லட்சுமணன் | தி.மு.க. |
| 26. | செங்கல்பட்டு | ஆறுமுகம் | பா.ம.க. |
| 27. | செங்கம் | போளூர் வரதன் | காங்கிரஸ் |
| 28. | சேப்பாக்கம் | கருணாநிதி | தி.மு.க. |
| 29. | சேரன்மாதேவி | வேல்துரை | காங்கிரஸ் |
| 30. | செய்யாறு | விஷ்ணுபிரசாத் | காங்கிரஸ் |
| 31. | சிதம்பரம் | அருண்மொழிதேவன் | அ.தி.மு.க. |
| 32. | சின்னசேலம் | உதயசூரியன் | தி.மு.க. |
| 33. | கோயம்புத்தூர் கிழக்கு | பொங்கலூர் பழனிசாமி | தி.மு.க. |
| 34. | கோயம்புத்தூர் மேற்கு | மலரவன் | அ.தி.மு.க. |
| 35. | கொளச்சல் | ஜெயபால் | காங்கிரஸ் |
| 36. | குன்னூர் | சௌந்திரபாண்டியன் | தி.மு.க. |
| 37. | கடலூர் | ஐயப்பன் | தி.மு.க. |
| 38. | கம்பம் | இராமகிருஷ்ணன் | ம.தி.மு.க. |
| 39. | தாராபுரம் | பிரபாவதி | தி.மு.க. |
| 40. | தர்மபுரி | வேலுசாமி | தி.மு.க. |
| 41. | திண்டுக்கல் | பாலபாரதி | சி.பி.எம். |
| 42. | டாக்டர் ஆர்கேநகர் | சேகர்பாபு | அ.தி.மு.க. |
| 43. | எடப்பாடி | காவேரி | பா.ம.க. |
| 44. | எழும்பூர் | பரிதி இளம்வழுதி | தி.மு.க. |
| 45. | ஈரோடு | ராஜா | தி.மு.க. |
| 46. | செஞ்சி | கண்ணன் | தி.மு.க. |
| 47. | கோபிசெட்டிபாளையம் | செங்கோட்டையன் | அ.தி.மு.க. |
| 48. | கூடலூர் | ராமசந்திரன் | தி.மு.க. |
| 49. | குடியாத்தம் | லதா | சி.பி.எம். |
| 50. | கும்மிடிப்பூண்டி | விஜயகுமார் | அ.தி.மு.க. |
| 51. | துறைமுகம் | அன்பழகன் | தி.மு.க. |
| 52. | அரூர் | தில்லிபாபு | சி.பி.எம். |
| 53. | ஒசூர் | கோபிநாத் | காங்கிரஸ் |
| 54. | இளையான்குடி | ராஜகண்ணப்பன் | தி.மு.க. |
| 55. | ஜெயங்கொண்டம் | ராஜேந்திரன் | அ.தி.மு.க. |
| 56. | கடலாடி | தங்கவேலன் | தி.மு.க. |
| 57. | கடையநல்லூர் | பீட்டர் அல்போன்ஸ் | காங்கிரஸ் |

| | | | |
|---|---|---|---|
| 58. | கலசப்பாக்கம் | கிருஷ்ணமூர்த்தி | அ.தி.மு.க. |
| 59. | காஞ்சிபுரம் | கமலாம்பாள் | பா.ம.க. |
| 60. | கண்டமங்கலம் | புஷ்பராஜ் | தி.மு.க. |
| 61. | காங்கயம் | சேகர் | காங்கிரஸ் |
| 62. | கன்னியாகுமரி | சுரேஷ்ராஜன் | தி.மு.க. |
| 63. | கபிலர்மலை | நெடுஞ்செழியன் | பா.ம.க. |
| 64. | காரைக்குடி | சுந்தரம் | காங்கிரஸ் |
| 65. | கரூர் | செந்தில் பாலாஜி | அ.தி.மு.க. |
| 66. | காட்பாடி | துரைமுருகன் | தி.மு.க. |
| 67. | காட்டுமன்னார்கோயில் | ரவிகுமார் | வி.சி. |
| 68. | காவேரிப்பட்டினம் | மேகநாதன் | பா.ம.க. |
| 69. | கிள்ளியூர் | ஜான்ஜேக்கப் | காங்கிரஸ் |
| 70. | கிணத்துக்கடவு | தாமோதரன் | அ.தி.மு.க. |
| 71. | கோவில்பட்டி | ராதாகிருஷ்ணன் | அ.தி.மு.க. |
| 72. | கொளத்தூர் | சுப்பிரமணியன் | அ.தி.மு.க. |
| 73. | கிருஷ்ணகிரி | செங்குட்டுவன் | தி.மு.க. |
| 74. | கிருஷ்ணராயபுரம் | காமராஜ் | தி.மு.க. |
| 75. | குளித்தலை | மாணிக்கம் | தி.மு.க. |
| 76. | கும்பகோணம் | கோசிமணி | தி.மு.க. |
| 77. | குறிஞ்சிப்பாடி | பன்னீர்செல்வம் | தி.மு.க. |
| 78. | குத்தாலம் | அன்பழகன் | தி.மு.க. |
| 79. | லால்குடி | சௌந்தரபாண்டியன் | தி.மு.க. |
| 80. | மதுரை மத்தி | பழனிவேல்ராஜன் | தி.மு.க. |
| 81. | மதுரை கிழக்கு | நன்மாறன் | சி.பி.எம். |
| 82. | மதுரை மேற்கு | சண்முகம் | அ.தி.மு.க. |
| 83. | மதுராந்தகம் | காயத்திரிதேவி | காங்கிரஸ் |
| 84. | மானாமதுரை | குணசேகரன் | அ.தி.மு.க. |
| 85. | மங்களூர் | செல்வம் | வி.சி. |
| 86. | மன்னார்குடி | சிவபுண்ணியம் | சி.பி.ஐ. |
| 87. | மருங்காபுரி | சின்னச்சாமி | அ.தி.மு.க. |
| 88. | மயிலாடுதுறை | ராஜ்குமார் | காங்கிரஸ் |
| 89. | மேல்மலையனூர் | செந்தமிழ்ச்செல்வன் | பா.ம.க. |
| 90. | மேலூர் | சாமி | அ.தி.மு.க. |
| 91. | மேட்டுப்பாளையம் | சின்னராஜ் | அ.தி.மு.க. |
| 92. | மேட்டூர் | மணி ஜி.கே. | பா.ம.க. |
| 93. | மொடக்குறிச்சி | பழனிச்சாமி | காங்கிரஸ் |
| 94. | மொரப்பூர் | முல்லைவேந்தன் | தி.மு.க. |
| 95. | முதுகுளத்தூர் | முருகவேல் | தி.மு.க. |
| 96. | முகையூர் | கலியவரதன் | பா.ம.க. |
| 97. | முசிறி | செல்வராஜ் | தி.மு.க. |
| 98. | மைலாப்பூர் | சேகர் | அ.தி.மு.க. |
| 99. | நாகப்பட்டினம் | மாரிமுத்து | சி.பி.எம். |
| 100. | நாகர்கோயில் | ராஜன் | தி.மு.க. |

| | | | |
|---|---|---|---|
| 101. | நாமக்கல் | ஜெயகுமார் | காங்கிரஸ் |
| 102. | நாங்குனேரி | வசந்தகுமார் | காங்கிரஸ் |
| 103. | நன்னிலம் | பத்மாவதி | சி.பி.ஐ. |
| 104. | நத்தம் | விஸ்வநாதன் | அ.தி.மு.க. |
| 105. | நாட்ராம்பள்ளி | சூரியகுமார் | தி.மு.க. |
| 106. | நெல்லிகுப்பம் | ராஜேந்திரன் | தி.மு.க. |
| 107. | நிலக்கோட்டை | தேன்மொழி | அ.தி.மு.க. |
| 108. | ஒட்டன்சத்திரம் | சக்கரபாணி | தி.மு.க. |
| 109. | ஓமலூர் | தமிழரசு | பா.ம.க. |
| 110. | ஊட்டி | கோபாலன் | காங்கிரஸ் |
| 111. | ஒரத்தநாடு | வைத்திலிங்கம் | அ.தி.மு.க. |
| 112. | ஒட்டபிடாரம் | மோகன் | அ.தி.மு.க. |
| 113. | பத்மநாபபுரம் | தியோடர் ரிஜினால்டு | தி.மு.க. |
| 114. | பாலக்கோடு | அன்பழகன் | அ.தி.மு.க. |
| 115. | பழனி | அன்பழகன்.எம் | தி.மு.க. |
| 116. | பாளையம்கோட்டை | மொயிதீன்கான் | தி.மு.க. |
| 117. | பல்லடம் | வேலுசாமி | அ.தி.மு.க. |
| 118. | பள்ளிப்பட்டு | ராமன் | காங்கிரஸ் |
| 119. | பனமரத்துப்பட்டி | ராஜேந்திரன் | தி.மு.க. |
| 120. | பன்ருட்டி | வேல்முருகன் | பா.ம.க. |
| 121. | பாபனாசம் | துரைகண்ணு | அ.தி.மு.க. |
| 122. | பரமக்குடி | ராம்பிரபு | காங்கிரஸ் |
| 123. | பூங்காநகர் | சீனிவாசன் | அ.தி.மு.க. |
| 124. | பட்டுக்கோட்டை | ரங்கராஜன் | காங்கிரஸ் |
| 125. | பென்னாகரம் | பெரியண்ணன் | தி.மு.க. |
| 126. | பெரம்பலூர் | ராஜ்குமார் | தி.மு.க. |
| 127. | பெரம்பூர் | மகேந்திரன் | சி.பி.எம். |
| 128. | பெரணமல்லூர் | எதிரொலிமணியன் | பா.ம.க. |
| 129. | பேராவூரணி | வீரகபிலன் | அ.தி.மு.க. |
| 130. | பெரியகுளம் | பன்னீர்செல்வம் | அ.தி.மு.க. |
| 131. | பெரணாம்பட்டு | சின்னசாமி | தி.மு.க. |
| 132. | பெருந்துறை | பொன்னுதுரை | அ.தி.மு.க. |
| 133. | பேரூர் | வேலுமணி | அ.தி.மு.க. |
| 134. | பொள்ளாச்சி | பொள்ளாச்சி ஜெயராமன் | அ.தி.மு.க. |
| 135. | போளூர் | விஜயகுமார் | காங்கிரஸ் |
| 136. | பொங்கலூர் | மணி | தி.மு.க. |
| 137. | பொன்னேரி | பாலரமணன் | அ.தி.மு.க. |
| 138. | பூம்புகார் | பெரியசாமி | பா.ம.க. |
| 139. | பூந்தமல்லி | சுதர்சனன் | காங்கிரஸ் |
| 140. | புதுக்கோட்டை | நெடுஞ்செழியன் | அ.தி.மு.க. |
| 141. | புரசவாக்கம் | பாபு | தி.மு.க. |
| 142. | ராதாபுரம் | அப்பாவு | தி.மு.க. |

| | | | |
|---|---|---|---|
| 143. | ராஜபாளையம் | சந்திரா | அ.தி.மு.க. |
| 144. | ராமநாதபுரம் | உசைன் அலி | காங்கிரஸ் |
| 145. | ராணிப்பேட்டை | காந்தி | தி.மு.க. |
| 146. | ராசிபுரம் | ராமசாமி | தி.மு.க. |
| 147. | ரிஷிவந்தியம் | சிவராஜ் | காங்கிரஸ் |
| 148. | ராயபுரம் | ஜெயகுமார் | அ.தி.மு.க. |
| 149. | சைதாப்பேட்டை | செந்தமிழன் | அ.தி.மு.க. |
| 150. | சேலம் - 1 | ரவிச்சந்திரன் | அ.தி.மு.க. |
| 151. | சேலம் - 2 | ஆறுமுகம் | தி.மு.க. |
| 152. | சமயநல்லூர் | தமிழரசி | தி.மு.க. |
| 153. | சங்கரன்கோயில் | கருப்புசாமி | அ.தி.மு.க. |
| 154. | சங்கராபுரம் | அங்கயற்கண்ணி | தி.மு.க. |
| 155. | சங்ககிரி | துரைசாமி | தி.மு.க. |
| 156. | சத்தியமங்கலம் | தர்மலிங்கம் | தி.மு.க. |
| 157. | சாத்தன்குளம் | ராணி வெங்கடேசன் | காங்கிரஸ் |
| 158. | சாத்தூர் | ராமச்சந்திரன் | தி.மு.க. |
| 159. | சேடப்பட்டி | துரைராஜ் | அ.தி.மு.க. |
| 160. | சேந்தமங்கலம் | பொன்னுசாமி | தி.மு.க. |
| 161. | சோழவந்தான் | மூர்த்தி | தி.மு.க. |
| 162. | சோழிங்கர் | அருள் அன்பரசு | காங்கிரஸ் |
| 163. | சிங்காநல்லூர் | சின்னசாமி | அ.தி.மு.க. |
| 164. | சீர்காழி | பன்னீர்செல்வம் | தி.மு.க. |
| 165. | சிவகங்கை | குணசேகரன் | சி.பி.ஐ. |
| 166. | சிவகாசி | ஞானதாசு | ம.தி.மு.க. |
| 167. | ஸ்ரீபெரும்புதூர் | யசோதா | காங்கிரஸ் |
| 168. | ஸ்ரீரங்கம் | பரஞ்சோதி | அ.தி.மு.க. |
| 169. | ஸ்ரீவைகுண்டம் | செல்வராஜ் | காங்கிரஸ் |
| 170. | ஸ்ரீவில்லிபுத்தூர் | ராமசாமி | சி.பி.ஐ. |
| 171. | தலைவாசல் | சின்னதுரை | தி.மு.க. |
| 172. | தாம்பரம் | ராஜா | தி.மு.க. |
| 173. | தாரமங்கலம் | கண்ணன் | பா.ம.க. |
| 174. | தென்காசி | கருப்புசாமி பாண்டியன் | தி.மு.க. |
| 175. | தளி | ராமசந்திரன் | சுயேட்சை |
| 176. | தண்டராம்பட்டு | வேலு | தி.மு.க. |
| 177. | தஞ்சாவூர் | உபயதுல்லா | தி.மு.க. |
| 178. | தியாகராயநகர் | கலைராஜன் | அ.தி.மு.க. |
| 179. | தேனி | கணேசன் | அ.தி.மு.க. |
| 180. | திருமங்கலம் | இளவரசன் | ம.தி.மு.க. |
| 181. | திருமயம் | சுப்புராம் | காங்கிரஸ் |
| 182. | திருநாவலூர் | குமரகுரு | அ.தி.மு.க. |
| 183. | திருவட்டாறு | லீமாரோஸ் | சி.பி.எம். |
| 184. | திருவெறும்பூர் | சேகரன் | தி.மு.க. |
| 185. | திருவிடைமருதூர் | பாரதிமோகன் | அ.தி.மு.க. |
| 186. | திருவோணம் | மகேஷ் கிருஷ்ணமூர்த்தி | தி.மு.க. |
| 187. | திருவொற்றியூர் | சாமி | தி.மு.க. |
| 188. | தொண்டாமுத்தூர் | மு. கண்ணப்பன் | ம.தி.மு.க. |
| 189. | தொட்டியம் | ராஜசேகரன் | காங்கிரஸ் |
| 190. | ஆயிரம் விளக்கு | ஸ்டாலின் | தி.மு.க. |
| 191. | திண்டிவனம் | சண்முகம் | அ.தி.மு.க. |
| 192. | திருச்செந்தூர் | அனிதா ராதாகிருஷ்ணன் | அ.தி.மு.க. |
| 193. | திருச்செங்கோடு | தங்கமணி | அ.தி.மு.க. |
| 194. | திருச்சி - 1 | அன்பில் பெரியசாமி | தி.மு.க. |
| 195. | திருச்சி - 2 | நேரு | தி.மு.க. |
| 196. | திருநெல்வேலி | மலைராசா | தி.மு.க. |
| 197. | திருப்பரங்குன்றம் | போஸ் | அ.தி.மு.க. |
| 198. | திருப்பத்தூர் | ராஜா | பா.ம.க. |
| 199. | திருப்பத்தூர் | பெரியகருப்பன் | தி.மு.க. |
| 200. | திருப்போரூர் | மூர்த்தி | பா.ம.க. |
| 201. | திருப்பூர் | கோவிந்தசாமி | சி.பி.எம். |
| 202. | திருத்துறைப்பூண்டி | உலகநாதன் | சி.பி.ஐ. |
| 203. | திருத்தணி | ஹரி | அ.தி.மு.க. |
| 204. | திருவாடானை | ராமசாமி | காங்கிரஸ் |
| 205. | திருவையாறு | சந்திரசேகரன் | தி.மு.க. |
| 206. | திருவள்ளூர் | சிவாஜி | தி.மு.க. |
| 207. | திருவண்ணாமலை | பிச்சாண்டி | தி.மு.க. |
| 208. | திருவாரூர் | மதிவாணன் | தி.மு.க. |
| 209. | திருவல்லிக்கேணி | பாதர்சயீது | அ.தி.மு.க. |
| 210. | தூத்துக்குடி | கீதாஜீவன் | தி.மு.க. |
| 211. | உடுமலைப்பேட்டை | சண்முகவேலு | அ.தி.மு.க. |
| 212. | உளுந்தூர்பேட்டை | திருநாவுக்கரசு | தி.மு.க. |
| 213. | உப்பிலியாபுரம் | ராணி | தி.மு.க. |
| 214. | உசிலம்பட்டி | மகேந்திரன் | அ.தி.மு.க. |
| 215. | உத்திரமேரூர் | சுந்தர் | தி.மு.க. |
| 216. | வலங்கைமான் | இளமதிசுப்பிரமணியன் | அ.தி.மு.க. |
| 217. | வால்பாறை | கோவை தங்கம் | காங்கிரஸ் |
| 218. | வந்தவாசி | ஜெயராமன் | தி.மு.க. |
| 219. | வாணியம்பாடி | அப்துல் பாசித் | தி.மு.க. |
| 220. | வானூர் | கணபதி | அ.தி.மு.க. |
| 221. | வரகூர் | சந்திரகாசி | அ.தி.மு.க. |
| 222. | வாசுதேவநல்லூர் | சதன் திருமலைகுமார் | ம.தி.மு.க. |
| 223. | வேதாரண்யம் | வேதரத்தினம் | தி.மு.க. |
| 224. | வேடசந்தூர் | தண்டபாணி | காங்கிரஸ் |
| 225. | வீரபாண்டி | ராஜேந்திரன் | தி.மு.க. |
| 226. | வெள்ளக்கோயில் | சாமிநாதன் | தி.மு.க. |

| | | |
|---|---|---|
| 227. வேலூர் | ஞானசேகரன் | காங்கிரஸ் |
| 228. விளாத்திகுளம் | சின்னப்பன் | அ.தி.மு.க. |
| 229. விளவங்கோடு | ஜான்ஜோசப் | சி.பி.எம். |
| 230. வில்லிவாக்கம் | ரங்கநாதன் | தி.மு.க. |
| 231. விழுப்புரம் | பொன்முடி | தி.மு.க. |
| 232. விருதுநகர் | வரதராசன் | ம.தி.மு.க. |
| 233. விருத்தாச்சலம் | விஜயகாந்த் | தேமுதிக |
| 234. ஏர்க்காடு | தமிழ்ச்செல்வன் | தி.மு.க. |

## தேவேந்திரர் ஓட்டு - தேர்தலுக்குப் பிந்திய கணிப்பு

மே 8, 2006 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு சமூகமும் யார் யாருக்கு ஓட்டளித்தன என்பதை இந்து - சிஎன்என் - ஐபி.என் எக்கிட் போல் கண்டறிந்து 9.5.2006 அன்றைய இந்து நாளிதழில் வெளியிட்டுள்ளது.

அந்தக் கணிப்பின்படி தேவேந்திரர் 49 சதவீதம் பேர் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர், 24 சதவீதம் பேர் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஓட்டளித்துள்ளனர். மீதி 26 சதவீதம் பேர் மற்ற கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர்.

### இந்து நாளிதழ் பட்டியல்

| சமூகம் | தி.மு.க. கூட்டணி சதவீதம் | அ.தி.மு.க. கூட்டணி சதவீதம் | தி.மு.க. கூடுதலாக உள்ளது சதவீதம் |
|---|---|---|---|
| மேற்குடிகள் | 46 | 36 | +10 |
| முக்குலத்தோர் | 42 | 41 | +1 |
| நாடார் | 44 | 33 | +11 |
| கவுண்டர்கள் | 44 | 35 | +9 |
| வன்னியர் | 48 | 36 | +12 |
| இதர பிற்படுத்தப்பட்ட சாதிகள் | 44 | 37 | +7 |
| **தேவேந்திரர்** | **49** | **25** | **+24** |
| சக்கிலியர்கள் | 36 | 43 | -7 |
| முஸ்லீம் | 50 | 31 | +19 |
| கிருத்துவர் | 52 | 27 | +25 |

தேவேந்திரர்களில் அ.தி.மு.க.வுக்கு (25%) ஓட்டளித்தவர்களை விட 24 சதவீதம் தேவேந்திரர்கள் கூடுதலாக தி.மு.க.வுக்கு (49%) ஓட்டளித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

## இதர மாநிலத் தேர்தல்கள்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுடன் பாண்டிச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம், ஆசாம் முதலிய மாநிலங்களிலும் தேர்தல் நடைபெற்றன.

கேரளாவில் காங்கிரஸ் கூட்டணியிடமிருந்து இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்டுகள் முன்பைவிட அதிகத் தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. அசாமில் எந்தக் கட்சிக் கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. காங்கிரஸ் கூட்டணி மற்ற சுயேட்சைகளைச் சேர்த்துக் கொண்டு ஆட்சியமைக்க வாய்ப்புள்ளது.

**வெற்றி பெற்ற தொகுதி எண்ணிக்கைகள்**

1. பாண்டிச்சேரி - காங்கிரஸ் மத்திய சபை அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| காங்கிரஸ் கூட்டணி | - | 20 | |
| அ.தி.மு.க. கூட்டணி | - | 7 | |
| **மொத்தம்** | - | 30 | **தொகுதிகள்** |

2. மேற்கு வங்களாம் - சி.பி.எம். மந்திரி சபை அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| இடதுசாரிக் கூட்டணி | - | 235 | |
| திரிணமூல் காங்கிரஸ் | - | 29 | |
| காங்கிரஸ் | - | 21 | |
| மற்றவர்கள் | - | 8 | |
| **மொத்தம்** | | 294 | **தொகுதிகள்** |

3. கேரளா - கம்யூனிஸ்டு மந்திரி சபை அமைகிறது.

| | | | |
|---|---|---|---|
| இடதுசாரிக் கூட்டணி | - | 98 | |
| காங்கிரஸ் கூட்டணி | - | 41 | |
| மற்றவர்கள் | - | 1 | |
| **மொத்தம்** | - | 140 | **தொகுதிகள்** |

4. அசாம்

| | | | |
|---|---|---|---|
| காங்கிரஸ் | - | 53 | |
| அசாம் கணபரிசத் கூட்டணி | - | 28 | |
| பா.ஜ.க. | - | 10 | |
| மற்றவர்கள் | - | 35 | |
| **மொத்தம்** | - | 126 | **தொகுதிகள்** |

## சோனியா காந்தி வெற்றி

இரட்டைப் பதவி காரணமாக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து மீண்டும் ரேபரேலி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி 4 லட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்றார். இவரது இந்த வெற்றி அவர் பிரதம் ஆவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு புதிய அமைச்சரவை

8.5.2006 தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வின் சிறுபான்மை அமைச்சரவை 13.5.2006 அன்று பதவி ஏற்றது. காங்கிரஸ், பா.ம.க., சி.பி.ஐ., சி.பி.எம்., ஆகிய கட்சிகள் வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்துள்ளன. 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவையில் தி.மு.க. 96 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**அமைச்சரவை**

| | | |
|---|---|---|
| 1. | மு. கருணாநிதி (சேப்பாக்கம்) சென்னை மாவட்டம் | - ஆட்சி நிர்வாகம், உள்துறை மற்றும் தொழில் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வை, தகவல் தொழில்நுட்பம், சிறுபான்மையர் நலன் |
| 2. | க. அன்பழகன் (துறைமுகம் - சென்னை) | - நிதி, சட்டசபை |
| 3. | ஆர்காடு என். வீராசாமி (அண்ணாநகர் - சென்னை) | - மின்துறை மற்றும் சிறு தொழில் துறை |
| 4. | மு.க. ஸ்டாலின் (ஆயிரம் விளக்கு - சென்னை) | - ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை |
| 5. | கோ.சி. மணி (கும்பகோணம் - தஞ்சாவூர் மாவட்டம்) | - கூட்டுறவுத் துறை |
| 6. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம் (சேலம் - 2) | - விவசாயத்துறை |
| 7. | துரைமுருகன் (காட்பாடி - வேலூர் மாவட்டம்) | - பொதுப்பணித்துறை |
| 8. | பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் (மத்திய மதுரை) | - இந்து அறநிலையத் துறை |
| 9. | க. பொன்முடி (விழுப்புரம்) | - தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்கல்வித் துறை |
| 10. | கே.என். நேரு (திருச்சி - 2) | - போக்குவரத்துத் துறை |
| 11. | எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் (குறிஞ்சிப்பாடி - கடலூர் மாவட்டம்) | - பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் |
| 12. | பெரியசாமி (ஆத்தூர் - திண்டுக்கல்) | - வருவாய் மற்றும் சட்டம், நீதி, சிறைத்துறை |
| 13. | என்.சுரேஷ்ராஜன் (கன்னியாகுமரி) | - சுற்றுலாத்துறை |
| 14. | பரிதிஇளம்வழுதி (எழும்பூர் - சென்னை) | - செய்தித்துறை, நகர்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் குழுமம் |
| 15. | எ.வ.வேலு (தண்டராம்பட்டு - திருவண்ணாமலை) | - உணவுத்துறை |
| 16. | சுப. தங்கவேலன் (கடலாடி - இராமநாதபுரம் மாவட்டம்) | - வீட்டுவசதித்துறை |
| 17. | சாத்தூர் ராமச்சந்திரன் (சாத்தூர் - காஞ்சிபுரம் மாவட்டம்) | - சுகாதாரத்துறை |
| 18. | த.மோ.அன்பரசன் (ஆலந்தூர் - காஞ்சிபுரம் மாவட்டம்) | - தொழிலாளர் துறை, வேலை வாய்ப்பு |
| 19. | கே.ஆர்.பெரியகருப்பன் (திருப்பத்தூர் - சிவகங்கை) | - குடிசைமாற்று வாரியம் தரிசுநில மேம்பாட்டுத்துறை |
| 20. | என்.கே.கே.பி.ராஜா (ஈரோடு) | - கைத்தறி மற்றும் துணித்தொழில் |
| 21. | தங்கம் தென்னரசு (அருப்புக்கோட்டை) | - பள்ளிக் கல்வித்துறை |
| 22. | எஸ்.என்.எம். உபயதுல்லா (தஞ்சாவூர்) | - வணிக வரித்துறை |
| 23. | மைதீன்கான் (பாளையம்கோட்டை) | - இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை, மாசுக்கட்டுப்பாடு, வகுப்பு வாரியம் |
| 24. | என். செல்வராஜ் (முசிறி - திருச்சி மாவட்டம்) | - வனத்துறை |
| 25. | மு.பெ. சாமிநாதன் (வெள்ளக்கோயில் - ஈரோடு மாவட்டம்) | - நெடுஞ்சாலைத்துறை மற்றும் துறைமுகங்கள் |
| 26. | பூங்கோதை (ஆலங்குளம் - நெல்லை மாவட்டம்) | - சமூக நலத்துறை |
| 27. | கீதா ஜீவன் (தூத்துக்குடி) | - கால்நடைத்துறை |
| 28. | ஏ. தமிழரசி (சமயநல்லூர் - மதுரை மாவட்டம்) | - ஆதிதிராவிட நலம் மற்றும் பழங்குடியினர் |

## தமிழகத்தில்
# புதிய கற்கால கல்கோடாரி

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்குப் பக்கத்தில் உள்ள செம்பியன் கண்டியூரில் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல் கோடாரி எழுத்துக்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது புதிய கற்கால கல்கோடாரி ஆகும். குத்தாலம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் திரு.வி. சண்முகநாதன் இதைக் கண்டு பிடித்துள்ளார்.



தமிழக தொல்லியல் துறை அந்தக் கல்கோடாரியில் உள்ள பட எழுத்துக்களை அடையாளம் கண்டுபிடித்துள்ளது.

ஐராவதம் மகாதேவன் இந்த எழுத்துக்கள் சிந்து சமவெளி நாகரிகமான ஹரப்பா - மொகஞ்சதாரோ எழுத்துக்களை ஒத்துள்ளன எனக் கண்டறிந்துள்ளார். இது கி.மு. 2000-1500 காலத்தைச் சேர்ந்தது எனக் கூறியுள்ளார்.

சிந்து சமவெளியின் மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவில் வாழ்ந்த பூர்வ குடிகள் ஆரியர்களா அல்லது தமிழர்களா என்னும் சர்ச்சைக்கு முடிவு கட்டும் புதையலாக இந்தக் கல்கோடாரி விளங்கும்.

இன்றைய பாகிஸ்தானில் உள்ள சிந்து சமவெளி மொஹஞ்சதாரோ - ஹரப்பாவில் நூற்றுக்கணக்கான இது மாதிரியான எழுத்துப் படங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஐராவதம் மகாதேவன் விளக்கியபடி கண்டியூரில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பட எழுத்துக்கள் நான்கில் முதலாவது ஒரு மனித உடலை (எலும்புக்கூடு) ஒத்திருக்கிறது. உட்கார்ந்த நிலை தெரிகிறது. இரண்டாவது பட எழுத்து ஒரு ஜாடி போல் உள்ளது. இது மாதிரி நூற்றுக்கணக்கான எழுத்துக்கள் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்டன. மகாதேவன் முதலெழுத்தை **முருகு** என்றும் இரண்டாவது எழுத்தை **அன்** என்றும் படித்துள்ளார். சேரும் போது இது **முருகன்** என்று படிக்கப்படும். இவர் போர்க்கடவுளாக சங்க இலக்கியங்களில் சித்தரிக்கப்படுகிறார்.

மூன்றாவது எழுத்து ஒரு திரிசூலம் போல் உள்ளது. நான்காவது எழுத்து ஒரு பிறை நடுவில் ஒரு வட்டச் சுற்று உள்ளது போல் உள்ளது.

புதிய கற்காலத்தில் தமிழர்களும் சிந்து சமவெளி மக்களும் ஒரே மொழியைப் பேசினார்கள் என ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.

❀ ❀ ❀

*முன்பக்கத் தொடர்ச்சி . . .*

29. கே.பி.பி.சாமி - மீன்வளத்துறை (திருவொற்றியூர் - திருவள்ளூர் மாவட்டம்)

30. உ. மதிவாணன் - பால்வளத்துறை (திருவாரூர்)

31. கா. ராமச்சந்திரன் - கதர் வாரியம் (கூடலூர் - நீலகிரி மாவட்டம்)

❀ ❀ ❀

## தமிழ்நாடு தேர்தல் 2006 கட்சிகள் பெற்ற வாக்குகள் சதவீதம்

**தி.மு.க. கூட்டணி**

| | | |
|---|---|---|
| தி.மு.க. | - | 26.51 |
| காங்கிரஸ் | - | 8.42 |
| பா.ம.க. | - | 5.39 |
| சி.பி.எம். | - | 2.65 |
| சி.பி.ஐ. | - | 1.61 |
| | = | 44.58% |

**அ.தி.மு.க. கூட்டணி**

| | | |
|---|---|---|
| அ.தி.மு.க. | - | 32.47 |
| ம.தி.மு.க. | - | 5.99 |
| வி.சி. | - | 1.30 |
| ம.ஜ.த. | - | 0.07 |
| | = | 39.83% |
| **விஜயகாந்த் கட்சி** | - | 8.33% |
| **இதர கட்சிகள் & சுயேட்சைகள்** | - | 7.26% |
| **மொத்தம்** | = | 100% |

❀ ❀ ❀

# 2006 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

*மே 2006 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகம் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிட்டது. ஒதுக்கப்பட்ட மூன்று தொகுதிகளில் தொட்டியம், கோவில்பட்டி ஆகிய இரண்டு தொகுதிகளில் தாமரைச் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தியது.*

*பாரதிய ஜனதா கட்சியுடன் தொகுதி பற்றிய உடன்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

*பா.ஜ.க - அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகக் கூட்டணி ஒப்பந்தம்*

## பாரதிய ஜனதா கட்சி, தமிழ்நாடு

## சட்டமன்ற தேர்தல் - 2006

தேதி: 10/ 04/ 2006.

நடைபெற உள்ள 2006 சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியுடன் **அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம்** தேர்தல் கூட்டணி வைத்து கொள்ள உடன்பாடு ஏற்பட்டுள்ளது. **அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம்** கட்சிக்கு கீழ்க்கண்ட 3 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட தொகுதிகள்

---

1. கோவில்பட்டி
2. ஆலங்குளம்
3. தொட்டியம்

| | |
|---|---|
| C.P. ராதாகிருஷ்ணன் Ex.M.P., | Dr. குருசாமி சித்தர் |
| மாநில தலைவர் | நிறுவனர் மற்றும் தலைவர் |
| பாரதிய ஜனதா கட்சி | அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம் |

COIMBATORE
Saturday, April 8, 2006

Weekend
CROSS SECTION

With The New Indian Express




# Shedding light on Mallars

*Marudha nilathu Mallar isai*, authored by G Mariappan, makes a dedicated attempt to trace the history of Mallars, the original residents of Marudha nilam (land with green paddy fields and its belt areas) and to re-establish their identity.

A divisional engineer of BSNL, Coimbatore, Mariappan has not spared any efforts in rediscovering the glorious past of Mallars - their culture, arts, literature, customs and tradition - and to reiterate that they were the bona fide occupants of the Marudha nilam.

In his book, he says that 'Mallar' is the title (suffix) of farmers, kings, chieftains and warriors, who constituted that community which had made lush green fields and river banks as its abode. Pandya Mallars had been ruling the Madurai kingdom in the 16th century.

The Vijayanagar empire captured Madurai from the Pandya Mallars and ruled it till their fall at the hands of the Naick kings from Andhra. The Naicks divided Madurai kingdom into 72 palayams and appointed Telugus as Palayakkarars to rule the palayams.

The Naicks made a calculative move to obliterate the glorious history of the Mallars and succeeded in their attempt.




They resorted to tough measures to subjugate the Mallars who had repeatedly fought against the Naicks only to be defeated and driven out of their own land. The Mallars fanned out to different parts of Tamil Nadu.

The Naicks successfully distorted the history of the gallant Mallars with the help of poets, who portrayed them in a poor light and referred to them as Pal'lars - a step down the rung of the social ladder. Thus in all literary works of the 17th century the Mallars were referred as Pallars.

Folk literature, folklore and epigraphs being the dependable source to study the art, culture, customs and tradition of the people of a particular region, Mariappan started studying the 'Pallu' works of yore and delved deep into them as they contained a wealth of information on the Mallar community and its glorious past.

After seven years of painstaking study Mariappan succeeded in bringing to light the hidden identity of Mallars, their rich cultural heritage and glorious past.

The book is a well researched one and the author's attempt to re-establish the identity of the people who were the real sons of the soil (Marudha nilam) deserves full praise. -

■ S Gururajan

# அன்புள்ள ஆசிரியருக்கு

**செந்தில் மள்ளர்** 21.2.2006
மள்ளர் மீட்புக்களம், மள்ளர்புரம்.

அய்யா குருசாமி சித்தர் அவர்களுக்கு,

மலர் 11 இதழ் 11 நவம்பர் 2005 மள்ளர்களின் மகுட மணிக்கதிரான மள்ளர் மலரில் வந்தேறிப் பகைவர்களை இனம் கண்டு கொள்ளும் வகையில் முகப்போவியத்துடன் வினா ஒன்று எழுப்பியிருந்தீர்கள். விடை எழுதவும் வேண்டியிருந்தீர்கள்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அன்றைய தமிழர் கூட்டணியை உடைக்க முயற்சித்தது வந்தேறி வடுகனான கலிங்கத்துக் காரவேலனின் சதி, இன்றைய காரவேலன்கள் யார்? யார்? என்று தாங்கள் எழுப்பிய வினாவைக் கண்டவுடனேயே, கலிங்கப் பட்டிக் காரவேலன் தான் எமது கண்முன் தோன்றினான். ஆம். காரவேலனின் தாய்தேசமான கலிங்க நாட்டியிலிருந்து வந்ததால் வை.கோபாலசாமி நாயக்கரின் முன்னோர்கள் தங்களின் தற்காலிக வாழ்விடத்திற்கு கலிங்கப்பட்டி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். கோபாலசாமி நாயக்கர் என்று எந்தத் தமிழனும் பெயர் வைத்துக் கொள்வதில்லை என்பதால் தான் ஒரு தெலுங்கன் என்பது யாருக்குமே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக பூனை தன் கண்களை மூடிக்கொண்டு உலகமே இருண்டு விட்டது என்று எண்ணுவதைப் போல, தனது பெயரினை வைகோ என்று குறுக்கிக் கொண்டுள்ளார். உலகத்தின் எந்த மூலை முடுக்குகளிலும் தமிழன் பாதிக்கப்பட்டால் குரல் கொடுப்பேன் என்று கோபாலசாமி நாயக்கர் அடிக்கடி அறிக்கை கொடுக்கிறார். கலிங்கப்பட்டி அருகேயுள்ள குறிஞ்சாக்குளத்தில் பச்சைத் தமிழர்களான பறையர்கள் நான்குபேர் வந்தேறி வடுகர்களால் வெட்டி வீசப்பட்டார்கள். ஆனால் வாய்கிழியப் பேசுகின்ற இந்த வடுகப்புயல் வாய் திறக்கவில்லை. பெயரளவில் கூட ஒரு அறிக்கை கொடுக்கவில்லை. மாறாக கொலைகார வடுகர்களை பிணையில் எடுத்தார். கொலைகாரர்களானாலும் அவ்வடுகர்கள் தனது இரத்த உறவாயிற்றே! தமிழர்கள் இளித்தவாயர்கள் என்றால் நாயுடுகாரு என்ன செய்வார்?

மூத்த தமிழ்க்குடியினரான மள்ளர்கள் 17 பேர் மு. கருணாநிதியால் பொருநை ஆற்றில் மூழ்கடித்துக் கொல்லப்பட்ட போதும் வாய்திறக்கவில்லை இந்த வைகோ. பிறகு இவர் எந்தத் தமிழனுக்காகக் குரல் கொடுக்கப் போகிறார்? கேப்பையில் நெய் வடிகிறதென்றால் கேட்பவனுக்கு மதி வேண்டும் அல்லவா? ஆம்! அதுவும் சரிதான். இங்கேயுள்ள தமிழர்கள் மதிக்கப்படவில்லை. மாறாக மிதிக்கப்படுகிறார்கள். இதனைக் கண்டு கொள்ளாமல் இவர் ஈழத்தமிழனுக்காகக் குரல் கொடுக்கிறாராம். ஈழத்திலிருக்கும் எம்மினச் சொந்தங்களுக்கும், வந்தேறித் தெலுங்கு வடுகர் கோபாலசாமி நாயக்கருக்கும் என்ன உறவு இருக்கின்றது? ஈழத்தமிழர்களை இலங்கை அகதிகள் என்கிறார் வாய்கூசாமல்! ஆனால் தான் ஒரு ஆந்திர அகதி என்பதை ஒரு போதும் இவர் கூறிக் கொண்டதில்லை. ஒன்றுமே புரியவில்லை! ஒன்றே ஒன்று மட்டும் புரிகிறது, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் மேதகு அன்றன் பாலசிங்கம் அவர்கள் டெக்கான் கெரால்டு எனும் ஆங்கில நாளேட்டிற்கு வெங்காலூரில் (பெங்களூர்) கொடுத்த செவ்வி ஒன்றில் ஈழத்தமிழனின் எதிரி யார்? என்று எங்களுக்குத் தெரியும்! அதனால் தான் நாங்கள் எதிரியோடு நேரடியாகப் போர் புரிகின்றோம். ஆனால் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குத் தன்னுடைய எதிரி யார் என்று கூடத் தெரியாமல் உழன்று கொண்டு நலிந்து போய் உள்ளனர், என்று கூறியிருந்தார். இது மட்டும் எமக்குச் சருக்கென்று புரிகிறது. இராசீவ் கொலை வழக்கில் சிக்கிய, கொலையில் தொடர்பில்லாத அப்பாவித் தமிழ்நாட்டுத் தமிழர்களை விடுவிக்க உரூபா 10,000 ம் நிதி உதவி கேட்ட தமிழர்களுக்கு 10 பைசா கூடத் தராமல் தனது தமிழ் உணர்வை வெளிப்படுத்தியவர் தான் இந்த வை.கோ. மாறாக குறிஞ்சாக் குளம் கொலையைச் செய்த வடுகர்களை மட்டும் தமது சொந்தப் பணத்தை செலவு செய்து பிணையில் எடுத்தவர். தவிர கட்டபொம்மு நாயுடுவிற்கு கயத்தாறில் சிலை எடுத்து தனது தெலுங்கு வெறியை வெளிப்படுத்திய வை.கோ. நாயுடுகாரு தமிழர்களின் தற்கொலைப் படைத் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனார் பற்றி எங்குமே தனது காண்டாமிருக வாயைத் திறந்தாரில்லை. வை.கோ. தெளிவாக இருக்கிறார். அவரது சூழ்ச்சி அரசியல் எமக்குப் புரிகிறது. எம்மக்களுக்குப் புரியவில்லையே!

மற்றுமொரு காரவேலன் பற்றி பார்ப்போம். அவர்தான் சிங்கத் தமிழன் பச்சைத் தமிழன் தெலுங்கர் விசயகாந்து நாயக்கர். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம் அது போல தமிழர்கள் நலிவுற்றிருக்கிறார்கள் என்று தெலுங்கர் விசயகாந்துகாரு வருத்தப்படுகிறார். தமிழர்கள் மீது அளவு கடந்த அக்கறை கொள்கிறார். கோபாலசாமி நாயக்கர், விசயகாந்து நாயக்கர் ஆகியோரின் முன்னோர்களால் தான் தமிழர்கள் தங்களது சொந்த மண்ணில் மண்ணுரிமையையும் தன்னுரிமையையும் இழந்து, வாழ்வுரிமையையும் பறிகொடுத்து நலிந்து போய் நிற்கிறார்கள். இனி மேலும் தமிழர்கள் தலைநிமிர முடியாமைக்குக் காரணமே விசயகாந்துகாரும், கோபால்சாமிகாரும் தான். எந்தமிழ் மக்களைப் பற்றி தெலுங்கர்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. பிறதேசிகள் எவரும் தமிழர் அரசியலில் தலையிடாமல் இருந்தாலே போதும், தமிழர் வாழ்வு செழிக்கும். வந்தேறித் திராவிடங்கள் திராவிடப் பகுதிகளில் போய் முன்னேற்றத்தையும்,

மறுமலர்ச்சியையும், முற்போக்கான தங்களின் செயல்பாடுகளையும் நிகழ்த்தட்டும். தமிழர் நாட்டில் தமிழர்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் பிறரின் உழைப்பும் உதவியும் தேவையில்லை.

அப்பாவித் தமிழ் இளைஞர்களை ஏய்த்துப் பிழைக்கும் விசயகாந்து நாயக்கர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஐதராபாத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் தான் ஒரு தெலுங்கனாகப் பிறந்ததில் பெருமிதம் கொள்கிறேன் என்று தெலுங்கில் செப்பியுள்ளார். நீங்கள் பச்சைத் தமிழன் சிங்கத் தமிழன் என்று திரைப்படங்களிலும், மேடைகளிலும் பேசுகிறீர்கள்! ஆனால் வீட்டில் தெலுங்கில் செப்புகிறீர்களே? என்று சக நண்பர்கள் வினவியதற்கு, அது தொழில், இது குடும்பம், எனது நாட்டு மொழி, வீட்டு மொழி, தாய்மொழி தெலுங்கு, எனது உடம்பில் ஓடக்கூடிய இரத்தம் தெலுங்கு இரத்தம் என்று அயல்நாட்டில் வாழ்கின்றோமே! என்கிற அச்சமின்றி! கேட்பதற்கு எந்தத் தமிழனும் இங்கே அணியமாக இல்லை என்கிற நெஞ்சுரத்தோடு பேசியிருக்கிறார் நாயக்கர். தமிழர்களுக்குத் தமிழர்கள் யார் என்றே தெரியவில்லையே! அவர் என்ன செய்வார்! அவர் அப்படித்தான் செப்புவார்.

தமிழர் நாட்டில் மள்ளரும், கள்ளரும் உண்டு! மறவரும் குறவரும் உண்டு! பறையரும், கரையரும் உண்டு! கோனாரும் சானாரும் உண்டு! வன்னியரும் உண்டு! ஆனால் தமிழர்கள் இல்லையே! என் செய்வது?

தமிழ்ப் பகைவனான விசயகாந்து நாயக்கரைத் தமிழ்க் கடவுள் என்று கோவில் கட்டி வணங்குமளவிற்கு தமிழர்கள் கேடுகெட்ட முட்டாள்களாக இருக்கின்றார்களே? தமிழினப் போராளி மருத்துவர் இராமதாசு அவர்களுக்கும் நடிப்பாளி விசயகாந்து நாயக்கர் காருகளுக்கும் ஏற்பட்ட மோதலைக் கூட அரசியல்வாதிக்கும், திரைப்பட நடிகருக்குமான சிக்கலாகவே செய்தி ஊடகங்களெல்லாம் சித்தரித்தன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? மண்ணின் மக்களான தமிழர்களுக்கும், வந்தேறி வடுகர்களான தெலுங்கர்களுக்குமான இனப் போரினையே, தமிழினப் போராளி பாட்டாளி மக்களின் பாதுகாவலர் தொடங்கி வைத்தார் என்பதே மெய். அந்த அடிப்படையில் மருத்துவர் இராமதாசு அவர்கள் பாராட்டுக்குரியவர் என்பதில் தமிழர்களிடத்தில் மாறுபட்ட கருத்து வேறுபட்ட கருத்து இருக்க முடியாது.

இன்றைய காரவேலன்கள் யார்? யார்? என்றால் சொல்லிக் கொண்டே போகலாம். ஏனென்றால் இங்கே எல்லாமே காரவேலன்கள்தானே? தமிழர்களை இல்லாத திராவிடம் தானே வழி நடத்துகிறது. எந்தத் தமிழன் இதுவரை திராவிடக் கட்சிகளுக்கு தலைமை ஏற்றிருக்கிறான்? திராவிட இயக்கத் தலைமைகளைப் பட்டியலிட்டாலே போதுமே அதில் காரவேலன்களின் பட்டியலும் பளிச்சென வெளிப்பட்டுவிடுமே!

1. தி.க. - இராமசாமி நாயக்கர் (ஈ.வெ.இரா. பெரியார்) கன்னடர்
2. அ.தி.மு.க. - மருதூர் கோபாலன் ராம்சந்தர் (எம்.சி.ஆர்) மலையாளி
3. அ.தி.மு.க. - செயலலிதா - கன்னடப் பிராமணர்
4. ம.தி.மு.க. - கோபாலசாமிநாயக்கர் (வை.கோ) - தெலுங்கர்
5. தே.மு.தி.க. - விசயராச் நாயக்கர் (விசயகாந்து) - தெலுங்கர்

என்று தொடர்கிறது காரவேலன்களின் பட்டியல்... தமிழ் முதுகுடியான தேவேந்திரர்களின் இயக்கங்கள் எந்தவித சித்தாந்த அறிவையும் பெறாமல், தான் தோன்றித்தனமாகக் கட்டுப்பாடில்லாமல் செயல்பட்டதால் சமூக விடுதலையை நோக்கி நகர முடியாமலும் அரசியல் அதிகாரத்தின் அருகே நெருங்க முடியாமலும் போனது. தேவேந்திரர்கள் தென் மாவட்டங்களில் ஒரு போர்க்குணமிக்க அரசியல் சக்தியாக உருப்பெற்ற போதிலும் உருப்படாமல் போனதற்குக் காரணம் அறிவார்த்தமான தலைமை வாய்க்கப் பெறாமையே! விளைவு இன்று தேவேந்திரர்களின் குடியிருப்புகளில் சமூகக் கொடியான சிவப்பு பச்சை நிறக்கொடி அகற்றப்பட்டு, விசயகாந் நாயக்கர் கொடியும், கோபால்சாமி நாயக்கர் கொடியும் பறப்பதைப் பார்க்க முடிகிறது. இந்தக் காட்சியைப் பார்க்கும் போது நெஞ்சம் பதறுகிறது, கதறுகிறது.

சில வேளைகளில் தேவேந்திர குல இளைஞர்களின் இது போன்ற ஈனச்செயல்களைக் கண்ணுரக் காணும் போது நெஞ்சாங்குலை துடிதுடிக்கிறது. இச்செயல்பாடுகள் வெட்கமாகவும் ஒருபுறம் வேதனையாகவும் உள்ளது. உண்மை வரலாறுகளைத் தெரிந்து கொண்டு உண்மை அரசியலை புரிந்து கொண்டு மள்ளர்கள் தமிழ்ப் பகைவர்களை இனம் கண்டு தமிழின ஓர்மை ஏற்பட வகை செய்தல் வேண்டும்.

இவ்விடை இருத்தலில் ஒன்றை மட்டும் முத்தாய்ப்பாக எம்மின மக்களுக்குச் சொல்லி முடிக்க ஆசைப்படுகிறேன்! கருணாநிதிக்கும், செயலலிதாவிற்கும் தமிழகத்தில் முறை சொல்லி அழைக்க இரத்த உறவினர்கள் ஒருவர் கூட இல்லாத நிலையில் அவர்கள் தமிழக ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி ஏறுவதைக் காணமுடிகிறது. ஆனால் மூத்த தமிழ்க்குடியான மள்ளர்கள், ஒரு கோடிப் பேர் இருக்கின்றோம் என்று மார்தட்டுகின்ற, அரசையும், ஆட்சிமுறையையும் தோற்றுவித்த குடும்பர்களாக இருந்து, காலாட்படை (தரைப்படை) கொண்டு நிர்வகித்த காலாடிகளாக இருந்து, நாட்டுத் தலைவர்களான மூப்பர்களாக இருந்து, பெரும் நிலக்கிழார்களான பண்ணாடிகளாக இருந்து, சேர, சோழ, பாண்டியத் தமிழ் மூவேந்தர்களாக இருந்து இன்று தேவேந்திர குல வேளாளர் என்று அடையாளம் கொண்டுள்ள நாம் ஆட்சி அதிகாரத்தின் அருகே கூட நெருங்க முடியவில்லையே! ஏன்? சமூக அக்கறையுள்ள

ஒவ்வொரு தேவேந்திரனும் சிந்திக்க வேண்டும். செயல்படவும் முன்வர வேண்டும். சமூக விடுதலைக்கு வரலாற்றுத் தேவையையும், அரசியல் அதிகாரத்தின் அவசியத்தையும் உணர்ந்து, தெளிந்த மள்ளரியக் கோட்பாட்டையும், தமிழ் தேசிய அரசியலையும் முன்னெடுக்கின்ற சமூக இயக்கங்களுக்கு, தன்னலமற்ற தலைமைகளுக்கு தேவேந்திர குலப் பெருமக்கள் பேராதரவு நல்கினால்தான் தேவேந்திரர் அரசியலில் ஒரு திருப்புமுனை ஏற்படும். தமிழ்நாட்டிற்கும் ஓர் விடியல் பிறக்கும்.

இவண்
**செந்தில் மள்ளர்**

❊ ❊ ❊

**தங்க. சங்கரபாண்டியன்** 18.4.06
71/1 - அ11, மணலிப்புது நகர்,
சென்னை - 600 103.

அன்புடையீர், வணக்கம்.

தேர்தல் - 2006 ஒதுக்கப்பட்ட தேவேந்திரர் நிலைப்பாடு என்ற தலைப்பிலான தலையங்கத்தை ஏப்ரல் 2006 மள்ளர் மலரில் படித்து மிகவும் மகிழ்ந்தேன். தேவேந்திரர்களின் சமூக ரீதியான ஒற்றுமையை அரசியல் ரீதியான ஒற்றுமையாகவும் எடுத்துச் சென்று தேவேந்திரர்களின் வலிமையைக் காட்டவுள்ள தங்கள் செயலை நான் உள்ளன்போடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். மள்ளர் சமுதாய உயர்வுக்காக பாடுபடும் தங்கள் தொண்டுகளை மனமார வரவேற்று வாழ்த்துகிறேன்.

அன்பன்
**தங்க. சங்கரபாண்டியன்**

❊ ❊ ❊

**பறம்பை அறிவன்** 18.04.2006
வேளச்சேரி, சென்னை - 42.

தமிழர் ஒற்றுமைக்கு
வழிகாட்டும் முடிவு - வரவேற்போம்.

இந்தத் தேர்தலில் . . . பிற தமிழ்ச் சமுதாயத்தினருக்கு வாக்களிக்க வேண்டும் மள்ளர் மலர் ஏப்ரல் 2006 - முடிவு பிற தமிழ்ச்சாதி அமைப்புகளும் - பா.ம.க - விடுதலைச் சிறுத்தைகள் போன்றவர்களும் எடுக்க வேண்டிய முடிவு. இம்முடிவு தமிழர் ஒற்றுமையை ஒரு படி மேலேற்றும் எனலாம்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனின் தேர்தல் குறித்த அறிக்கையின் அடிப்படைக்கு ஒத்துரிமை உடையது. சுப. வீ போன்றவர்களின் அரைவேக்காடான அணுகுமுறை தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்காது. இந்திய ஒன்றிய அரசில் தேசிய இனங்களின் தன்னுரிமைகளுக்கான முழக்கம் மேலோங்கிடத் தமிழர்கள் ஒற்றுமை ஓர் எடுத்துக்காட்டாதல் வேண்டும்.

அன்புடன்
**பறம்பை அறிவன்**

❊ ❊ ❊

**க. ஹரிதேவேந்திரர்**
6/10, தேவேந்திரர் இல்லம், திருமால் நத்தம்,
திருவேடகம் (அஞ்சல்), வாடிப்பட்டி (தாலூகா),
மதுரை - 625 234.

வீரவணக்கம்

முனைவர் குருசாமி சித்தர் அவர்கள் அறிவது என்னவென்றால் தாங்கள் தொகுத்து எழுதிய சேர சோழ பாண்டிய மூவேந்தர் மரபினரின் அடையாளங்கள் என்னும் சிறிய நூலை எனக்கு அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பி வைத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். உங்களது சமுதாய பணி சிறப்பாக இருக்க எனது வீரவணக்கத்துடன் வாழ்த்துக்கள்.

தேவேந்திரன் என்று சொல்லடா
தேசத்தை ஆளுவோம் என்று
சபதம் கொள்ளடா. . .

வாழ்க! தேவேந்திரர் குலம்!
வளர்க! தேவேந்திரர் ஒற்றுமை

வீரவணக்கத்துடன்
**க. ஹரிதேவேந்திரர்**

❊ ❊ ❊

**சங்கமித்ரா** 20.4.06
சென்னை.

அன்புடன் குருசாமி சித்தருக்கு,

வணக்கம். நலம். நமதும் நாட்டமும் நன்றி. ஏப்ரல் 06 இதழில் ஆனைமுத்து நூல் நிதி செய்தியை சிறப்பாக வெளியிட்டமைக்கு. இனம் மொழிப் போரில் நீங்கள் எங்களுடன்தான் இருக்கிறீர்கள். சமீபத்தில் தோழர் பழமலையைச் சந்தித்தேன். பள்ளரும் - பள்ளியும் - ஓரினம் தான் - விவசாய இனம் - வடதமிழ்நாட்டில் போர் வீரர்களாகவும் தென் தமிழ்நாட்டில் விவசாயிகளாகவும் - ஆனவர்கள் இவர்கள் என்றார். நிறைய பேச வேண்டும். முதலில் கடும் உழைப்பு - தியாகத்தில் மள்ளர்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

அன்புடன்
**சங்கமித்ரா**

மள்ளர் சிக்கலில் சங்கமித்ரா / ஆனைமுத்து கவனம் செலுத்தவில்லை என்பது உங்கள் குறை. சிக்கல் பெரிய ஆய்வுக்குரியது. உங்கள் தலைவர்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. சாதி ஒழிப்புக்கு பதிலாக பட்டியல் மாற்றம் கேட்பது எமக்கு உடன்பாடில்லை. அதே சமயம் பள்ளர் என்ற இனம் இந்தியாவின் மற்ற பகுதியில் இல்லை என்பதால் இவர்கள் தெலுங்கர் ஆட்சியில் ஏதிலிகளானவர்களாக இருக்கலாம் என்பதும் தெரிகிறது.

**மள்ளர் மலர் குறிப்பு :** மள்ளர்கள் என்கிற சாதி இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் இருக்கிறார்கள். சாதிகள் பட்டியலைப் பார்க்கவும்.

❊ ❊ ❊

இலக்கியத் தொடர்

# செங்கோட்டுப் பள்ளு

சென்ற இதழ் தொடர்ச்சி:

பொலி எருது முட்டி வீழ்ந்த குடும்பனார் களைப்புத் தீர்ந்து எழுகிறார். வயலில் சேறடித்து நாலுழவு உழுது கொளுஞ்போட்டு மிதித்து பரம்படித்து நெல் விதைக்கின்றார். நாற்று வளர்ந்து நடப்பருவம் வந்ததை பண்ணைக்காரனுக்குத் தெரிவித்து வழிபாடு செய்து நாற்று நடுகின்றனர். பிறகு களை எடுத்துப் பயிர் வளர்க்கின்றனர். நெற்பயிர் வளர்ந்து முருகுகிறது. அறுவடைக்கு ஏற்பாடு செய்கின்றனர்.

### 57. குடும்பனாரின் இரு மனைவியரும் களைப்புத் தீர்த்து எழுப்புதல்

சிந்து

#### புலியைப் பிடிக்க வல்லநீ பொலி எருதுக்கு வீழ்ந்ததென் என்று சிவகாமி மள்ளத்தியார் வருந்துதல்

புலியதனைப் பிடித்திழுக்க வல்லாய் – பொலியெருதைப்
புடிக்கமாட் டாததென்ன சொல்லாய்
வலுவிழுந்து தான்விழுந்து கிடந்தாய் -- அடங்காத
வசவனையும் ஏன்பிடிக்கத் தொடர்ந்தாய்
மலரயன்முன் னாள்விதித்த விதியோ -- இளையபள்ளி
மருந்தினிட லாகிரியின் வெறியோ
கெலிவாக எழுந்துமொழி விள்ளாய் -- இதுவென்ன
கிரகசா ரப்பலனோ பள்ளா 768

#### அபிராமி மள்ளத்தியார் வருத்தம்

எந்தத் தெய்வங்களை நீ பழித்தாய் -- மனம்பதறு
தின்றுநீ யார்முகத்தில் விழித்தாய்
மந்திரியோ சனையென்று கெடுமோ -- எனையாளும்
வல்லாளன் சமர்த்துகள்போய் விடுமோ
சந்திரசே கரஜயர் குறையோ -- மூத்தபள்ளி
சக்களத்தி யாளிட்ட முறையோ
இந்தவினை யார்விளைத்த இடும்போ -- இனியானும்
என்னசெய்வேன் எனதாசைக் குடும்பா 769

#### சிவகாமி மள்ளத்தியார்

தடுத்தெனையுங் கொண்டுபழி யெடுத்தாய் – தினசரிக்குத்
தப்பாமல் அவள்வீட்டில் படுத்தாய்
அடுத்தவள்தன் ஆசைகரும் பாச்சே -- பழிகாரி
யாலெனதா சையுங்கசந்து போச்சே
சடுத் தம்வரு காமலிரு வரையும் -- சரியாகத்
தான் நடத்திக் கொள்ளமனங் குறியும்
படுத்தகிடை யெழுந்திருந்து கொள்ளாய் -- செங்கோடர்
பாதமற வாதபண்ணைப் பள்ளா 770

#### அபிராமி மள்ளத்தியார்

நன்மொழிகள் தனையுமுன்பு தட்டாய் -- அதுமீறி
நட்டாற்றில் எந்தனைக்கை விட்டாய்
வன்மமே பாராட்டும் வஞ்சி -- யாளெனவும்
மனதிலெண் ணாமலும்நீ அஞ்சி
கன்மவினை யாலழைத்துக் கொண்டாய் -- மகராசி
காலிடவும் இந்தப்பலன் கண்டாய்
தன்மவான் தனக்கிதென்ன இடும்போ -- என்கவலை
தான்தீர எழுந்திரும்என் குடும்பா 771

#### சதாசிவக் குடும்பனார் களைப்பு தெளிந்து எழுதல்

சிந்து

பாங்குட னேஇரு மாது -- வந்து
பக்கத்தி ருந்திடும் போது
தூங்கியெ ழுந்தவன் போலே -- விழும்
சோபந்த ணிந்ததின் மேலே 772

பள்ளனெ ழுந்துகண் விழித்தான் -- மூத்த
பள்ளித னைக்கண்டு பழித்தான்
கள்ளியி ளையாளைக் குறித்தான் -- கடைக்
கண்ணாலே பார்த்தவன் சிரித்தான் 773

மன்மதன் போலவன் எழுந்து -- பள்ளி
மாருடன் கூடியே நடந்து
தன்மனைக் கேகியே நுழைந்து -- மெத்தச்
சந்தோஷ மாகவே யிருந்து 774

காதல்கொண் டேமனந் துடித்து -- மெத்தக்
கள்ளுச்சா ராயமுங் குடித்து
சாதமும் உண்டிளைப் பாறி -- வெறி
தள்ளிட லாகிரி மீறி 775

வஞ்சியி ருவரும் வாடி என்று
வந்தபின் மூவருங் கூடி
கொஞ்சியே முத்துமுத் தாடி -- மையல்
கொண்டிட வேவிளை யாடி 776



---

#### முன்பக்கத் தொடர்ச்சி . . .

அ. பாலகணேசன்,
எண் 278, VSR Complex, New bridge Road,
புதுப்பட்டினம், கல்பாக்கம் - 603 102.

மதிப்பிற்குரிய ஐயா, அவர்களுக்கு கல்பாக்கத்தில் இருந்து அ. பாலகணேசன் எழுதிக் கொண்டது. தங்களிடம் தொலைபேசியில் பேச விரும்பினேன். ஆனால் தொலைபேசி எண் கிடைக்கவில்லை. நான் தங்கள் இனத்திற்கு (தேவேந்திரர்) ஒரு மணமேடை அமைத்து இருக்கிறேன். இதில் நமது மக்கள் இலவசமாக பதிவு செய்யலாம். இலவசமாகவே முகவரி எடுத்துக் கொள்ளலாம். மேலும் விபரம் யாருக்காவது தேவைப்பட்டால் செல்லுக்கு (செல் : 98941 35741) மாலை 6 மணிக்கு மேல் தொடர்பு கொள்ள சொல்லும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

இணைய முகவரி : www.subhakalyan.com

அன்புடன்
அ. பாலகணேசன்

❀ ❀ ❀

தையல ரேஇரு மென்றே -- பள்ளன்
தான்வயல் காட்டுக்குச் சென்றே
எய்யு மதன்தனை வெல்வான் -- வயல்
ஏர்கட்டப் பள்ளர்க்குச் சொல்வான் 777

## 58. குடும்பர் சேறடித்து நெல் விதைத்தல்

கலிப்பா

வாளேறுஞ் செங்கரத்தார் வாசுகிமே ரையர்வயல்
தாளேறுஞ் செய்கையெனத் தானேரு கட்டிமள்ளர்
காளேறு பாட்டுவெகு கற்பனையாய்ப் பாடியவர்
கோளாறாய்த் தானுழுது கொத்தித் திருத்தினரே 778

நாலுழவு

முந்தத்த ரிசடித்து முச்சாரி யாய்ம றித்து
நைந்திடச் சேற்கலக்கி நயமாக நாலுழவு
பிந்தியுழுது கட்டிப் போர்த்து மிதித்த முத்திப்
பந்தி யாக வரம்பு படுத்திக் கொத்தித் திருத்தித் 779

பரம்படித்தல் -- கொளுஞ்சி போட்டு மிதித்தல்

திரைகொண்டங் கங்கு தண்ணீர்தேங்கவ டித்துவிட
நிறைநிறை யாய்மடைகள் நீக்கிப் பரம்படித்து
குறைவில் லாமல் குண்டினில் கொளுஞ்சி போட்டு மிதித்து
விரைநெல்லின் கோட்டை யெல்லா மெடுத்துவந் தேசலத்தில் 780

சாமி கும்பிட்டு நெல் விதைத்தல்

போட்டுச் சனிதங் காமல்புகல்உத்தி ரம்தசமி
நாட்டுத் திங்கட் கிழமைநல்வேளை யில்எடுத்து
கோட்டையெல் லாம்வயலில் கொண்டுவந் தேவைத்தவர்
நாட்டுக் கதிபதியார் நாரிவி நாயகர்க்கும் 781

தளபதி யானதுரை சண்முகா னந்தருக் கும்
பழமுந்தேங் காய்கரும்பும் பாக்குவெற்றி லையும்வைத்து
வளமாய்த்தூ பதீபங்கள் வரிசை யுடன்கொடுத்து
அழகுயர் நாகமலை ஆண்டவ ரைப்பணிந்து 782

**குணவான் சதாசிவக் குடும்பன் மனமகிழ்ந்து**
**இணைசேர் முளைநெல் வாரி எடுத்துமுன் னேவிதைத்தான்**
மணல்வாரி யோடைம்பது வகைநெல் விதைக ளெல்லாம்
தணிவாய் வகைக்கொருவர் தானு மடியில் கட்டி 783

சாத்தன் திருமலையும் சங்கன் சங்கரன் ரங்கன்
கூத்தன் வடமன் பொம்மன் கோவிந்தன் தாண்டவனும்
போத்தன் கரும்பயனும் புங்கன் இருளன் பொன்னன்
பார்த்தன் காத்தான் பழனி பலவன் மங்காம்பழனி 784

நல்லான்இ ளையான்மாரன் நஞ்சன் சிலம்பரன் வீ ரன்
எல்லோருங் கூடிநெல்லை எடுத்தணி யாகவீ சி
வல்லமை யாய்விதைத்து மாதே வரைத்தொழுது
இல்லந்த னில்வந்தவர் இருந்துசு கித்தனரே 785

## 59. மள்ளர் -- மள்ளியர் நெல் நாற்று வளர்த்தல்

கலிப்பா

கன்னல்வில்லி யைச்செயித்த கட்டழகர் பண்ணைவயல்
செந்நெல்தனை யேவிதைத்துச் சேர்ந்திருந்து பள்ளரெல்லாம்
நன்னய மாய்ச்சிறிது நாற்றுவிட வேணுமென்று
உன்னத மாய்நிலத்தை உண்மையுடன் பார்த்து வந்தார் 786

சிந்து

பூமருவுங் கலைமகளும் பூமடந்தை வளர்நாடு
வளர்நாடு பரமசிவன் மனமகிழ்ந்த திருநாடு
திருநாடு சேரன் செங்கோல் செலுத்துபவர் வளநாடு
வளநாடு மலைமகள் மா தவங்கள்புரிந் திடும்நாடு
புரிநாடு பொன்னுலகோர் புகழ்ந்திடுபூந் துறைநாடு
நாடுதனில் கைலைநிகர் நாகவெற்பெ னும்வரையில்
வரையதனில் நிசரூப மாய்வளர்ந்த பரமசிவன்
பரமசிவன் தனதுவயல் பள்ளருடன் பள்ளியர்கள் 787

பள்ளியர்பள் ளர்கள்கூடிப் பாடியேகொண் டாடியவர்
ஆடியவர் தெய்வங்களை யன்புடனே போற்றிசெய்து
போற்றிசெய்து நாகவெற்பார் பொன்னடியைத் தான்தொழுது
தான்தொழுது வயலுழுது தண்ணிவிட்டுச் சேறுழப்பிச்
சேறுநஞ்சு போனபின்பு திரும்பஅஞ்சா றுழவடித்து
உழவடித்துக் கரைதிருத்தி ஒப்புரவாய்ப் பரம்படித்துப்
பரம்படித்து நல்முகுர்த்தம் பார்த்துநல்ல வேளையிலே
வேளையிலே நாற்றுவிட வேணுமென்று கூடியவர் 788

கூடியவர் சம்பாநெல் கோட்டை யெல்லாந் தானெடுத்து
தானெடுத்துச் சலந்தனிலே தானூறப் போட்டெடுத்து
எடுத்துவந்து மூன்றாம்நாள் எங்கள்பெரு மான்வயலில்
வயலினிலே தெளித்தநெல்லின் வகையதுநான் என்னசொல்வேன்
என்னசொல்வேன் லாவாணம் ஈர்க்கிச்சம்பா பெரியவங்கி
வங்கிசிறு முல்லைச்சம்பா மணக்கத்தைநெல் மகிழஞ்சம்பா
சம்பாவெண் மிளகுசம்பா சின்னச்சம்பா சின்னவங்கி
சின்னவங்கி செண்பகப்பூ சீரகச்சம் பாநெல்லது 789

நெல்லுமிவை நூறுவகை நேர்மையுட னேஎடுத்து
எடுத்திவர்முன் னூறுகல மேவயலில் தான்தெளித்துத்
தெளித்துமிவர் நாற்றுவிட்டுச் சிவனையடி தொழுதிறைஞ்சித்
தொழுதுமவ ரவர்மனையில் சுகமுடனே வந்திருந்து
வந்துமறு நாள்வயலில் மருவுதண்ணீர் தான்வடித்து
வடித்துமுளைத் தண்ணீர்கட்டி வடித்தபின்நீர் தேங்கக்கட்டி
கட்டியிவர் கனிவுடனே கண்ணிமைபோல் காத்திருந்தார்
இருந்தளவில் மயிர் முனைபோ லேமுளைகள் தானெழுந்து 790

நாற்று வளர்த்தல்

எழுந்ததுவும் பசலைநிறம் எனவாகியே வளர்ந்து
வளர்ந்துமடந் தையர்முலைமேல் மருவுபசு நரம்பெனவே
நரம்பெனவும் இளமுலைமின் னாரவர்கள் குளித்தமஞ்சள்
மஞ்சள்பசு மஞ்சள்நிற மாகியுஞ்சா மளமாகி
ஆகியுமே பணிமலைமேல் ஆனந்த மாகிநின்ற
ஆகிநின்ற கடவுளர்என் ஐயரிடப் பாகமதில்
பாகமதிலே விளங்கும் பார்வதிபூங் கிளிமொழியாள்
கிளிமொழிபைங் கொடியருள்போல் கிளைத்துமவள் நிறமாகி 791

## 60. குடும்பனார் நடப்பருவம் வந்ததை பண்ணையாருக்குச் சொல்லுதல்

நிறமாகி நாட்கதுநாள்
நேர்த்தியுடன் வளர்ந்திடவே
வளர்ந்திடவே நாற்றதுவும்
மாதமிரண் டானதுவே
ஆனபின்பு பண்ணையினார்க்
கறிக்கையிட வேணுமென்று

செங்கோட்டுப் பள்ளு

வேணுமென்றே தான்நடந்து
மேவுசதா சிவக்குடும்பன்
குடும்பனும்வந் தாண்டவரைக்
கும்பிட்டுப் பக்கம்நின்று
பக்கம்நின்று "நாற்றுவிட்ட
பயிர்பருவம் வந்ததையா
வந்ததையா நாற்றுநட
மனுவுரையு" மென்றனனே
என்று சொல்லப் பண்ணையினார்
இன்பமொடு தான்மகிழ்ந்து 792

மகிழ்ந்துனக்குப் பலவிதமாய்
வார்த்தைசொல்ல வேணுமோதான்
வேணுமோதான் சடுதியிலே
விமலர்பண்ணை வயல்உழுது
வயல்உழுது நாற்றுநட்டு
வாருமென்ற தானுரைத்தார்
உரைத்தபின்பு பள்ளனும்வந்
துளமகிழ்ந்து மனைபுகுந்து
மனைபுகுந்து மனைவியரை மகிழ்ந்து
விளையாடியவன்
விளையாடிச் சுகித்திருந்து
மேன்மையுடன் வீற்றிருந்தான் 793

கலிப்பா

சீரொழுகு முப்புரத்தைத் தீயெரித்த செம்மலனார்
நாரொழுகு நெற்பயிரின் நாற்றுநட வேணுமென்று
தாரொழுகு பள்ளர்தமைத் தானழைத்து மேகுடும்பன்
ஏருழுகச் சொல்லியும்நாற் றேநடுகக் கூறினனே 794

## 61. மள்ளர் - மள்ளியர் ஏர் உழுது நாற்று நடுதல்

சிந்து

**நாற்று முடிக்கு வழிபாடு செய்தல்**

முந்தித் தரிசை யடித்துமறிந்து நைந்திடச் சேற்றைக் கலக்கியே
முச்சாரிநா லுழவு செய்துமி திச்சே றிக்கட்டி யழுத்தியே
சந்தும் வரம்பும் திருத்தி மடைவிட் டுந்திப் பரம்பை யடித்துமே
தைரியங் கொண்டு பள்ளர் செந்நெலின் பயிரின்நாற்றைப் பிடுங்கி யே
வந்து கலசம் ஆடி முடியை குந்த வைத்தவர் மிகுத்துமே
**மள்ள** ருந்துதித் தாடி னார்பின்பு பள்ளி மார்களுங் கூடினார்
விந்தை நாரிவி நாய கர்துரை கந்த ருக்கிள நீர்பழம்
மிகவும் படைத்துத் தூபதீபம் வகையுடன்எடுத் தார்களே 795

**நாற்றிசை வணங்கியும் தம் நெற்றியில் வைத்து வணங்கியும் சதாசிவக் குடும்பனார் முதல் நாற்றை நடுதல்**

இப்படிப் பூசை செய்து கோதையென்
னப்பனை வேண்டிப் பணிந்து மே
எடுத்து வாரி நாற்று முடியை
அடுத்து வயலில் வீசியே
குப்பல தான பயிரை மறைத்து
நற்பரி வாய்ச்ச தாசிவக்
குடும்பன் வந்து நாற்று முடியைக்
கடம்பன் துணையென் றெடுத்து மே
சர்ப்ப வரைதனைப் பார்த்துக் கும்பிட்டு
மெய்ப்புடன் **நாற்றிசை வணங்கியே**
தனது **நெற்றிவைத் திறக்கி** யூணித்தன்
மனைவி மார்கையில் கொடுத்து மே
தப்புவ ராமலும் நெருங்கி யீற்றும
றுப்புவ ராலும் வரிசை யாய்த்
தானணி யாகவும் நடுங்க னென்றிவன்
கோனென நின்றனன் பள்ளீரே 796

**நாற்று நடுதல்**

**மள்ளியர் நடுகைக் கும்மி**

பன்னக மேர்வளர் வித்தகனார் -- திருப்
பண்ணை வயலினில் நாற்றுநட
நன்னய மானசெங் கோட்டுப் பள்ளி -- சீ
ரங்கப்பள் ளியிரு வோரும் வந்து
பொன்னுறை நாக்கி ரித்துரை யை -- இவர்
போற்றியும் **நாற்றிசை யுந்தொழுது**
உன்னித மாகயிருகையில் நாற்றை
உகந்தெ டுத்தெதிர் ஊணின ரே 797

மங்கைய ரெல்லோருங் கூடுங்க டி -- பணி
மாமலை நாதரை வாழ்த்துங்கடி
பொங்கமி கும்வயல் நாற்றுந டுகவே
பூவைய ரெல்லோரும் வாருங்கடி
அங்கமுத் தேபசுந் தங்கமுத் தே -- திரு
வாயிமீ னாட்சிவி சாலாட்சி
கொங்கை யழகி பழனி சவுந்தரி
கோதண்டி யானந்தி கோவிந்தி யே 798

நாச்சிவ சந்திகோ லாகல மாணிக்கி
நாரணியேஅல்லி நாயகி யே
பேச்சி சின்னக்குட்டி யேஅலமேலு
பேரிச்சி கரிச்சி தெய்வானை
மாச்சி கலச்சி யபிராமி -- சுக
வல்லிய ரேமட்டு வார்குழலி
ஆச்சி பிரமி வடிவி திருமி -- நல்
ஆரணங் கேஅம ராவதி யே 799

சின்னப்பொன் னேகறுப் பாயிமுத்தே -- அடி
சீரங்கி சாரங்கியே தங்கமே
கன்னிமுத் தேரங்க நாயகியே -- அடி
காவேரி யேபத்ர காளியம் மே
வன்னமு லைச்சிய ரெல்லோ ருங்கூடி
வரிசை யாகவுங் கைச்சுருக் காய்
நன்னய மாகநிரை நிரையாய் நின்று
நாற்று நடுங்கடி பள்ளிய ரே 800

கலிப்பா

மாற்றுக்கால் சேடன்முடி வைக்கநிலை கொண்டவர்தன்
சேற்றக்கால் நஞ்சையினில் சேயிழையார் தாங்கூடி
நேற்றிக்கால் வைத்தவர்கள் நிற்கும்நிலை கண்டவர்கள்
நாற்றுக்கால் விட்டு நடுகக்கால் ஏறாதே 801

**நடவு நடும் மள்ளியர் ஒயில்**

சிந்து

பங்கயன்மால்சுரர் பணிந்தவர் - திருச்
செங்கையி லேகெதை யணிந்தவர்

செங்கோட்டுப் பள்ளு

பன்ன மேரரன் வயலிலே – இளங்
கன்னியர் நாற்றுகள் நடுகச் சே
மங்கையர் கார்குழல் சொருக்கிலும் -- அவர்
இங்கித வேல்வி ழி நெருக்கிலும்
வண்ணக்க லசமென் முலையிலும் -- நுதல்
உன்னித வதனச் சிலையிலும்
திங்களி ணைமுகக் கலையிலும் -- பசுந்
தங்கம்நி றைவள்ளைக் குழையிலும்
சின்னஞ்சிற் றிடைப்பட் டுடையிலும் -- துகில்
மன்னியு லாவன்ன நடையிலும்
செங்கனி வாய்ச்சுவைப் பேச்சிலும் -- நல்ல
குங்குமக் களபப் பூச்சிலும்
சின்னஞ்சி றுக்கியர் வலையி லே -- மனம்
பின்னித்த விக்குதே பள்ளிய ரே 802

பிறைபு னல்வளர் வேணியன் -- புவி
யிறைவன் பினாக பாணியன்
பேதைக் கிடது பாக முகந்த
கோதைப் பதியர் வயலிலே
முறையொ ழுங்கென வனிதையர் -- நிறை
நிறையெ னநின்று வரிசை யாய்
முன்பா கப்பயி ரெத்து மே -- வளர்
சம்பா நாற்றுகள் நடுகச் சே
நறைம லிகுழல் மாலையும் -- கும்ப
வரையுஞ் சிற்றிடைச் சேலையும்
நளின ரத்தின மணிகளும் -- மிகு
அழகு றைத்திடு பணிகளும்
விரைவுற் றிதுகள் அசையவே -- பிற
குரையுத் தரியம் ஒசியவே
விச்சித் திரமாக நாற்றுந டுகிற
உச்சிதம் பாரும் பள்ளியரே 803

அண்டர் முடிவடுப் பாத னார் -- திருத்
தொண்டருக் கானவி னோதனார்
அற்புத மானதென் கைலை யான்பணி
வெற்பரன் தன்திரு வயலி லே
செண்டு முலைகளுங் குலுங்க வே -- கரம்
ரெண்டிலும் பொன்வளை யலுங்க வே
சித்திரம் போல்வயல் நாற்று மேநட
உத்தியி லேகையில் பார்த்து மே
கெண்டையைக் கெண்டைகண் டோடவே -- மலர்க்
கொண்டையை வண்டுகொண் டாடவே
கிஞ்சுகம் நன்மொழி கேட்கவே -- குயில்
குஞ்சுக ளுந்தொனி பார்க்கவே
அண்டையி லேமயில் கூட்டமாய் இணை
உண்டென நின்றுகொண் டாட்ட மாய்
அங்குறைந் தேகுதுவனிதை மார்கள
லங்கிர்தம் பாரடி பள்ளியரே 804

உருக்கொண் டெங்கினும் நிறைந்த வர் -- அடி
யருக்கு ளன்பென உறைந்தவர்
உரக கிரியர் வயலில் பெண்களும்
பரவி யேபயிர் நடுகையில்
கருக் கொண் டங்கனே பார்க்கை யில் -- அவர்
செருக்கும் வங்கணச் சேர்க்கையும்
கண்டேன் இங்கிதப் புதுமையே -- மனங்
கொண்டால் தங்கிலை பதுமை யே
சொருக்கென் றால்மேகப் படத்தைப் போல் -- முலை
நெருக்கென் றாலிணைக் குடத்தைப் போல்
தொடையென் றால்வாழைத் தண்டைப்போல் – விழிக்
கடையென் றால்கணை ரெண்டைப் போல்
மெருக்கென் றால்மின்னல் வடிவைப் போல் -- இடைச்
சுருக்கென் றால்வஞ்சிக் கொடியைப் போல்
விபரி தங்கண்டு காம லாகிரி
உபரி யாகுது பள்ளிய ரே 805

**மள்ளியர் விளையாட்டு**

நந்தியே றும்நந்தி நாத னார் -- சிவ
சுந்தரன் சுந்தரன் தூத னார்
நாரணன் ஆரணன் பணிகு வார் -- பரி
பூரணன் பூரணம் பணியு மோர்
வந்துவந் தம்பிகை வாழ்த்த வும் -- இடம்
தந்துதந் தும்பர்கள் போற்ற நீள்
மாசுணன் மாசுணன் கைலை மேவுமு
லாசன்வி லாசன்மென் வயலிலே
மந்திகள் மந்திபலாக்கனிச் சுளை
சிந்திடச் சிந்துகண் டாக்க மாய்
மாவடு மாவடு வெடுத்து மே சுளை
தாவிய தாவில்வந் தடுத்து மே
பந்தி பந்தியெனக் குவித்து மே -- அரன்
கந்தருக் கென்றகை குவித்துமே
பாடிக்கொண் டாடியே பள்ளியர் தாம்செயும்
வேடிக்கை பாரும் பள்ளிய ரே 806

ஐந்து கரக்கய முகனை யுந் -- திருச்
செந்தியி லுற்றிடு குகனை யும்
அக்கா லத்தினில் பயிலி னார்பணி
சொற்கா ராதனர் வயலி லே
வந்துபெண் ணார்களும் தோணி யே பயிர்
சந்துவி டாமலும் ஊணி யே
வச்சாரிக் கள்ளியாம் வீ ரி யும் அந்தக்
குச்சேறிப் பள்ளியாள் மாரி யும்
சந்தன மென்றுளைச் சேற்றையும் வீ சிக் கோ
விந்தன் முதுகினில் பூசி யே
சக்காந் தங்களைப் பேசி யே -- வெகு
எக்கா ளங்களில் ஏசி யே
பந்தயஞ் சொல்லியும் நடவு மே -- நட்டு
முந்தின வள்தொல்லி யிடவு மே
பாசாங் குக்கள்ளி மூசாம்பும் -- அவர்
பசம்பும் பாரடி பள்ளியரே 807

படித்த லந்தனில் நடித்த வர் -- உமை
பங்க னார்சிவ லிங்க னார்
பணிப் பொருப்புறை தனித்திருப்பதி
படுகை நாற்று நடுகச் சே
வடித்த மதுவைக் குடித்துப் பள்ளியர்
மயக்க மும்பெருந் தியக்க மும்
வரைப்பில் காலைப் பரப்பிச் சோர்ந்து
வாடி யுங்களை மூடி யும்

துடித்த யிதழை மடித்துக் கடித்துச்
சோக்கை யும்பெருங் கேக்கை யும்
தூக்க மும்வெறி மூர்க்க மும் -- வெகு
சோப மும்பிர தாப மும்
வெடித்த சொல்களும் தடித்த மல்களும்
வீ ம்ப திகமே னாம்ப தும்
வீ ராப் புங்கொங்கை மாராப் பும் -- கவர்
வீ சாம்பும் பாரடி பள்ளிய ரே 808

நாடித் தேடி யிருவர் அறியா
ஞானத் தலைவர் ஆன வர்
நாகா திக்கிரி போகா திப்பரர்
நளினஞ் செறியுங் கழனியில்
ஆடிப்பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடுகச் சே
ஆழூ ருப்பள்ளி சடைச்சி யும் -- பொன்னி
சேழூ ருக்குள்ளி யிடைச்சி யும்
கூடிக் கூடிப் பேசி யே -- மது
குடித்து மேசண்டை பிடித்து மே
கொள்ளா மல்வெறி தள்ளாடி -- மருள்
கொண்டா டிச்சடைச் சியும் விழச்
சாடிச் சாடி யோடித் தாண்டவன்
சடைச்சி மேல்மண்ணைத் துடைச்சு மே
தலையைத் தாங்குறான் போலவள் குத்து
முலையைத் தாங்குறான் பள்ளிய ரே 809

தொண்டருக்கருள் செய்தவர்சிறுத்
தொண்டர் மகவைக் கொய்தவர்
தோற்றுக்கால் துயர்விடுத்தவர் -- பண்ணை
நாற்றுக் கால்வயல் நடுகச்சே
துண்டுக் கட்டையன் மகள் சாராயத்தை
மண்டிக் கொட்டையன் மகளுடன்
துள்ளானை வம்புகூறியே -- நிலை
கொள்ளாமல் தடுமாறியே
ரண்டுகாலையுங் கிளப்பியே -- விழுந்
துண்டு சேற்றினில் உழப்பவே
நங்கானோடி யெடுத்துமே -- புதைச்
சங்கோரத்தினில் கிடத்தவே
கண்டெழுந்தவள் துடித்தபோதிவன்
ரெண்டுகையையும் பிடித்துமே
கண்ணால் உருகமிகவுங் கெஞ்சிடும்
விண்ணானம் பாரும் பள்ளியரே 810

மண்டலம் புகழ் நாககிரியார்
தொண்டர் தம்திருத் தொழும்பனார்
மாதவ மிகுந்திடு மெஞ்ஞானியர்
பாதமே சிரம் புனைந்தவன்
பண்டுகலையுந்தெரிந்த பொன்னுச்செல்
லண்டையில் குடி கொண்டுமே
பட்சமாக நின்றாடல் புரியும்
சச்சிதானந்தர் வயலிலே
கண்டுநன் மொழிமாதர் மதுவை
உண்டு மயக்கந் தெளிந்தல்லோ
கடவுளார் நிலமுழுதும் நெற்பயிர்
நடவு நட்டது முடியவே

அண்டர் நாயகரெனுஞ் செங்கோடரை
தெண்டஞ்செய்து பள்ளியர் பள்ளர்
ஆடிப்பாடியவரவர் மனை
நாடிச்சேர்ந்திருந் தார்களே 811

**மள்ளியர் வயலில் பொங்கல் வைத்து கன்னிமாருக்கு பூசை செய்து களை பறித்தல்**

கலிப்பா

நாற்றுநட்ட பின்பவர்முன் னால்விதைத்த நெற்பயிர்கள்
சாத்துநட வுங்களைகள் தான்பறிக்க வேணுமென்று
நீற்றவர்பண் ணைக்குடும்பன் நேரிழைமார் தன்முகங்கள்
பார்த்துமிது வேலையெல்லாம் பண்புடனே செய்யுமென்றான் 812

பனகமலை யாண்டவர்தன் பண்ணைவயல் களைபறிக்க
அனநடையாள் மூத்தபள்ளி அரிவையர்சீ ரங்கவல்லி
மனமகிழ்ந்து வயலருகில் வந்து பொங்கல் தானுமிட்டு
வனிதைகன்னி மார்க்கதிக வரிசையுடன் கனிபடைத்து 813

தொடரும் . . .

## உறுதி தருவது கொள்கை

மெர்வின்

உலகில் வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே தங்களுக்கு ஏற்றக் கொள்கைகளைக் கொண்டு அதுவே வாழ்க்கை என்று எண்ணி செயல்பட்டிருக்கிறார்கள்.

மனிதனாகப் பிறந்து இருப்பதனால் நமக்குக் கட்டாயம் கொள்கை இருந்தே ஆக வேண்டும். நமக்கு மட்டுமே மனம் இருப்பதனால் அதில் எந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறோமோ அதற்கு ஏற்றபடிதான் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

கொள்கையை நாம் எப்படி மேற்கொள்கிறோம் எவ்விதம் கையாளுகிறோம் என்பதனைப் பொருத்துதான் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

உலகில் வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே தங்களுக்கு ஏற்றக் கொள்கைகளைக் கொண்டு அதுவே வாழ்க்கை என்று எண்ணி செயல்பட்டிருக்கிறார்கள்.

கொள்கையை நம்முடைய ஓட்டத்தில் கலந்து விடுமாறு செய்யும் பொழுது தான் வெற்றிகரமான வாழ்க்கை உருவாகும்.

அவசியமான அடிப்படை கொள்கை சரியாக அமைந்துவிட்டால் வாழ்க்கையும் செம்மையாக அமையும். என்கிறார் அறிஞர் எட்வர்ட்ஸ்.

கொலம்பஸ் ஒரு புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார் என்பதற்காக நான் அவரை புகழவில்லை. ஆனால் தன்னுடைய கொள்கை மீது நம்பிக்கை வைத்து கண்டுபிடித்தாரே அதற்காக அவரை பாராட்டுகிறேன் என்று புகழாரம் சூட்டுகிறார் டாகர்ட் என்ற வரலாற்று அறிஞர்.

இவருடைய கூற்று எவ்வளவு பெரிய உண்மை என்பதற்கு மெல்வின் ஜோன்ஸ் சிறந்த

எடுத்துக்காட்டாகும். மெல்வின் ஜோன்ஸ் பட்டம் பெற்றதும் இன்சூரன்ஸ் ஏஜன்ஸி பிரிவில் விற்பனையாளராகச் சேர்ந்தார்.

அங்கு இரண்டு ஆண்டுகள் பணியாற்றியதும் தொழில் நுட்பங்களை எல்லாம் கற்றுக் கொண்டார். அதன் பிறகு சொந்தமாக ஏஜென்சியை ஆரம்பித்தார்.

தொழிலுக்காக பலரை சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் மூலம் அனேகர் நண்பர்களாயினர். நண்பர்களின் வற்புறுத்தலுக்காக வணிகர் சங்கத்தில் சேர்ந்தார். இது போன்ற பல சங்கங்கள் ஆங்காங்கே இயங்கிக் கொண்டிருந்தன.

ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல் இருந்தது. ஒரு நாள் வணிக சங்கத்தில் பேசக்கூடிய வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. தன்னுடைய அனுபவத்தை விவரித்துக் கூறினார். இவருடைய பேச்சின் நளினம் எல்லோரையும் கவர்ந்தது. தொழில் வளர்ச்சிக்கு ஒற்றுமை மிகவும் அவசியம் என்று எடுத்துரைத்தார்.

எல்லா சங்கமும் ஒன்றுபட வேண்டும் என்றார். பேச்சில் மட்டும் இதனை வெளிப்படுத்தாமல் உடனே செயலில் இறங்கினார். பல சங்கங்களை ஒன்றுபடுத்திக் காட்டினார். அதன் பயன் வணிகச் சங்கத்தின் செயலாளரானார். இவருடைய பேச்சாற்றலினால் சங்கத்தின் பெருக்கம், கோட்பாடுகள், திட்டங்கள் பற்றி மிகவும் சிறப்பாகப் பேசி அனைத்து உறுப்பினர்களையும் தன்னிடம் இழுத்துக் கொண்டார்.

ஒரு இயக்குனர் கூட்டத்தில் சங்கம் தன் குறுகிய வட்டத்திலிருந்து சமுதாயத்திற்கும் ஏழ்மையில் அவதியுறும் மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டும், பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்தார். இவர் நடத்தி வந்த ஏஜென்சியும் மிகவும் விரிவடைந்து பெரிய தொழில் அதிபராகவும் உயர்ந்தார், இவர் கூறிய கருத்துகள் யாருடைய மனதிலும் பதியவில்லை.

இது நமக்குத் தேவை இல்லாத ஒன்று, வேண்டாத விஷயங்களில் தலையிட வேண்டாம் என்று உறுப்பினர்கள் கூறினார்கள். ஆனால் மெல்வின் ஜோன்ஸ் தன்னுடைய கொள்கையை விட்டு விடவில்லை. ஒவ்வொரு உறுப்பினர் வீட்டுக்கும் சென்று தன் கொள்கையை ஆணித்தரமாகப் பதிய வைத்தார். முதலில் எங்கு சென்றாலும் எதிர்ப்பு மயமாகவே இருந்தது.

வரவேற்பும் வாழ்த்துரையும் கிடைக்கவில்லை! வசவான வார்த்தைகள் தான் வரவேற்றன. ஆனாலும் இவர் மனம் தளரவில்லை. மற்றவர் நலனுக்காக ஒரு சங்கத்தை ஆரம்பித்தே ஆக வேண்டும் என்பதில் வைராக்கியமாக இருந்தார். இவருடைய கொள்கைக்கு யாரும் துணைவரவில்லை. தனிமனிதராக பல இடங்களுக்குச் சென்று தன்னுடைய கொள்கையை விவரித்தார். தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து கூட்டங்களை கூட்டினார். கூட்டத்திற்கு வந்திருக்கும் ஒவ்வொரு தொழிலதிபர் உள்ளங்களையும் உருக்கும் வகையில் எடுத்துரைத்தார். தன்னுடைய கொள்கையை தெளிவாக விளக்கினார்.

ஆனாலும் பயனில்லை! தன்னுடைய ஏஜென்சியை மகனிடம் ஒப்படைத்து விட்டு முழுநேரப் பணியாக இறங்கினார். காலை முதல் இரவு வரை பல கூட்டங்களுக்குச் சென்று தன்னுடைய கொள்கையை செம்மையாகக் கூறினார். இறுதியில் தன்னுடைய கொள்கையின் அடிப்படையில் இவரே ஒரு சங்கத்தைத் தோற்றுவித்தார். தொண்டு, தோழமை என்ற இரு சொல்லில் அடங்கிய சங்கம் தான் அது.

ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி லைன்ஸ் கிளப் என்று பெயரிட்டார். இதனுடைய விரிவாக்கம் விடுதலை, விவேகம் நமது நாட்டு பாதுகாப்பு என்ற கொள்கை கொண்ட வாசகத்தை அழகாக வெளியிட்டது. இந்தச் சங்கத்தின் நோக்கம் ஆங்கிலத்தில் என்பது. 1917 இல் மெல்வின் ஜோன்ஸ் இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்தார்.

சிங்கம் விலங்குகளின் அரசன் என்பதற்கு ஏற்ப வீரம் வலிமை உறுதி துணிவு போன்ற பல நற்குணங்களைப் பிரதிபலிக்கும் சின்னமாக சிங்கத்தை வைத்தார். அவருடைய என்ற பெயர் கொண்ட சங்கம் இன்று முழுவதும் உலகம் எங்கும் வியாபித்து உள்ளது. மெல்வின் ஜோன்ஸ் என்ற தனிமனிதரால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் உலகம் எங்கும் பரவி இருப்பதற்குக் காரணம்.

அவர் கொண்டிருந்த கொள்கையில் உறுதியுடன் நிலைத்து நின்றது தான். இன்று இந்தச் சங்கத்தில் இருப்பது கௌரமாகக் கருதப்படுகிறது. எந்தச் சாதனைப் பணியும் முதலில் முடியாத செயலாகத் தான் தெரியும். ஆனாலும் அதனைத் தொடர்ந்து விடாமல் செய்யும் பொழுது வெற்றிகரமாக அமையும்.

ஒரே கொள்கையை மனதில் நிலைநிறுத்தி விடாப்பிடியாகச் செயலாற்றினால் நிச்சயமாக வெற்றியைப் பெற்று விடமுடியும். திடீரென்று வேகமாக பணியாற்றக் கூடாது. வேகம் விரயமாகி விடும். நாம் சாதிக்க வேண்டிய பணியில் அதிக கவனத்தைச் செலுத்துவது மிகவும் முக்கியம். தெளிவான நோக்கத்துடன் தொடங்கும் எந்தப் பணியும் ஆர்வத்தைத் தூண்டும் சக்தியாக உருவாகும்.

நாம் அடைய நினைக்கும் இலக்கிற்கும், அடையும் இடத்திற்கும் அதிக இடைவெளி இருக்கக் கூடாது. எது நமக்குத் தேவையோ அதனையே தீர்மானிக்க வேண்டும். இலக்கைத் தீர்மானித்த பின்பு படிப்படியாக செயலாற்ற வேண்டும். திட்டமிடாத திடீர் முயற்சிகள் வெற்றியைத் தராது. படிப்படியாக உறுதியாக செயலாற்ற வேண்டும். நம்மால் முடியக்கூடிய செயல்களை மட்டுமே நாடினால் என்றுமே வெற்றியை பெறமுடியும்.

- நன்றி : தன்னம்பிக்கை மே 2006

❀ ❀ ❀

# தமிழுணர்வும் அரசியல் நிலைப்பாடும்

புலவர் த. சுந்தரராசன்

தமிழ் மண்ணில் தமிழ் மொழியினை எல்லா நிலைகளிலும் நிலைகொள்ளச் செய்ய முடியவில்லையே என்னும் ஏக்கம் தமிழ் உணர்வாளர்கள் உள்ளங்களில் நிலைகொண்டுள்ளது. போராட்டக் களங்களில் அந்த உணர்வினை வளர்த்தெடுப்பதற்காகக் காலம் தோறும் பலர் முயன்று வருகின்றனர். மக்கள் தமிழ் உணர்வாளர்களின் உணர்வினைப் போற்றுகின்றனர். மொழி உணர்வாளர்களின் மொழி உணர்வைவிடத் தன்னுணர்வை நிலை நாட்ட நினைப்பதால் போராட்டக் களங்கள் சிதைவடைகின்றன.

சில வேளைகளில் போராட்டக் களத்தில் தலைமை தாங்குவோர், கொள்கைகளை மனத்தில் கொள்ளாது தாம் கொண்டுள்ள கட்சியின் கொள்கைக்கு உடன்பட்டவராக வாழ நினைப்பதால் போராட்டம் திசைமாறி, கோரிக்கை முழக்கம் வெற்றி கொள்ள முடியாது இடை முறிந்துவிடுகிறது. இந்த நிலையினைப் புறந்தள்ளி வெற்றி கொள்ள வேண்டும் என அறிஞர்களும், போராளிகளும் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

உலகில் மொழி உரிமைப் போராட்டம், ஆட்சி உரிமைப் போராட்டம், பண்பாட்டு உரிமைப் போராட்டம் இனக்காப்புப் போராட்டம் எனப் பல உரிமைப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. நடைபெற்று வருகின்றன.

தென் வியட்நாமில் அமெரிக்கப் படைகள் தோற்று வெளியேறின. அதன்பின் தென் வியட்நாமும் வடவியட்நாமும் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைந்தன. அவ்வாறு அமைக்கப்பட்ட பொதுவுடைமை ஆட்சியினை ஏற்க மறுத்த புத்த பிட்சுகள் தங்கள் உடலின் மீது மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்துக் கொண்டு உயிர்விட்டனர்.

இந்திய அரசு 1950 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின்கீழ், 1965 ஆம் ஆண்டு சனவரி 26 முதல், நாட்டின் ஒரே ஆட்சி மொழி இந்தி மொழி தான் என அறிவிப்புச் செய்தது. இந்திய அரசின் இந்த முடிவினை எதிர்த்துத் தமிழ் மண் போர்க்களம் கண்டது. 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சென்னையில் ஒருவரும், திருவொற்றியூரில் ஒருவரும், வாலாசாபாத்தில் ஒருவரும், கோவை குமாரபாளையத்தில் ஆறுபேரும், பொள்ளாச்சியில் பத்துப்பேரும், திருப்பூரில் நான்கு பேரும், உக்கடத்தில் இருவரும், வெள்ளக்கோவிலில் மூன்று பேரும், சென்னிமலையில் ஒருவரும், மதுரைக் கூடலூரில் ஐந்து பேரும், கம்பத்தில் இரண்டு பேரும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் ஆறுபேரும், ஆர்க்காட்டில் ஒருவரும், சோலையார்ப்பேட்டையில் ஒருவரும், பேரணாம்பட்டில் மூன்று பேரும், திருச்செங்கோட்டில் நால்வரும், சிதம்பரத்தில் ஒருவரும், செஞ்சியில் ஒருவரும், திருச்சிராப்பள்ளிக் கரூரில் மூன்று பேரும், மணப்பாறையில் ஒருவரும், திருச்சிராப்பள்ளியில் நால்வரும், புதுவையில் ஐவரும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் குண்டடிபட்டு வீர மரணம் அடைந்த மாணவன் இராசேந்திரனின் கல்லறை சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டையில் வீர வரலாற்றுக் காவியமாகத் திகழ்கிறது.

1938 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் களப்பலியான நடராசன், தாலமுத்து கல்லறை சென்னை, மூலக்கொத்தளம் சுடுகாட்டில் காட்சி தருகிறது. மொழிப்போராட்டம் தமிழ் மண்ணில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ் மண்ணில் மொழிப்போராட்டத்தின் மூலம் கிடைத்த உணர்வுகள் அரசியல் உணர்வாக்கப்பட்டு ஆட்சிக் கட்டில் ஏறப் பயன்பட்டது. தமிழ்மொழி உரிமையினை நிலைநாட்ட கள உணர்வு நிலைப்படுத்தப்படவில்லை.

ஆனால், உலக நாடுகள் பலவற்றுள் நடைபெற்ற மொழிப்போராட்டங்கள் மொழி உணர்வை மிளிரச் செய்து கொண்டிருக்கின்றன.

வங்கதேசத்தில் (முன்னாள் கிழக்குப் பாக்கித்தான்) உருதுமொழி திணிக்கப்பட்ட போது டாக்கா பல்கலைக்கழக மாணவராக இருந்த முசிபூர் ரகுமான் வங்க மொழியின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். இந்த உணர்வு மாணவர் உள்ளங்களில் குடிகொண்டு 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள் பெரும் கிளர்ச்சியாக வெடித்தது. அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 5 மாணவர்கள் உயிர்ப்பலியானார்கள்.

பாக்கித்தானிலிருந்து வங்கதேசம் பிரிந்து தனிநாடாக ஆனபின்பு, ஐக்கிய நாடுகள் சபையில் மொழிப்போராட்ட நாளைத் தாய்மொழி நாளாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. 1998 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான யுனெசுகோவின் 30 ஆவது பொது அமர்வில் பங்கேற்ற வங்காளதேச அரசின் கோரிக்கையினை ஏற்றுத் தாய்மொழிகளின் வளர்ச்சியினை மக்கள் உள்ளங்களில் நிலைகொள்ளச் செய்யப் பிப்பிரவரி 21 ஆம் நாளினைத் தாய்மொழி நாள் என அறிவிப்புச் செய்தது. அந்த நாள் கி.பி. 2000 ஆண்டு முதல் உலகம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மொழிகள் அனைத்தும் வாழும் வரலாற்றுச் சின்னம். எனவே அவை போற்றப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் யுனெசுகோ கொள்கைப்படி, தாய்மொழியே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும்,

நீதி மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்னும் கொள்கையினை யுனெசுகோ வலியுறுத்துகிறது.

2006 ஆம் ஆண்டு பிப்பிரவரி 21 ஆம் நாள் இந்திய நாடாளுமன்றத்தில் தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்கள் தத்தமது தாய் மொழியில் பேசுவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மக்களவைத் தலைவர் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சமுதாயம் என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

வங்காளிகள் வங்க மொழியிலும், கொங்கணி, போசுபுரி, மணிப்புரி, உருது, ஒரியா பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்தம் தாய்மொழியிலே பேசினர். மய்ய அமைச்சரான ஜி.கே. வாசன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியபின்பு தமிழில் பேசித் தன்னுடைய அடிமை நிலையினை வெளிப்படுத்தியுள்ளார்.

24.2.2006 அன்று தினமணி இதழ் வெளிப்படுத்திய தலையங்கம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், பஞ்சாபி, குசராத்தி, மராத்தி போன்ற 15 மொழிகளிலும் சபை உறுப்பினர்கள் துள்ளிக் குதித்து விளாசித் தள்ளிவிட்டார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தாய்மொழியிலேயே பேசத் துடித்திருக்கிறார்கள். அவர்களை அமைதிப்படுத்துவதற்கு மக்களவைத் தலைவர் சாட்டர்சி அரும்பாடுபட வேண்டியதாயிற்று. பாரதத்தின் பன்முக வடிவமும் கதம்ப மணமும் எடுப்பாகி நின்றிருக்கிறது.

அதோடு தொன்மை வளமிக்க தமிழ் இன்றளவும் - ஆறு கோடித் தமிழர்களின் நாவில் நடனமிடும் உயிர்ப்புடைய மக்கள் மொழி என்பதனை சூசகமாக நினைவூட்டியிருக்கலாம். நல்ல வாய்ப்பு நழுவிவிட்டது என்று தினமணி தலையங்கம் குறிப்பிட்டுள்ளது.

உலகில் பல நாடுகளில் மொழிக்காப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்படுகின்றன. துருக்கியின் தந்தை எனப் போற்றப்படும் கமால் பாட்சா 1923 அக்டோபர் 29 ஆம் நாள் துருக்கியரின் அரசு குடியரசாக இருக்கும் என்று மாபெரும் தேசிய மன்றம் அறிவித்தது. அப்போது துருக்கி மொழி மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்பட்டது. அரபிய எழுத்து வடிவம் துருக்கி மொழிக்கு ஏற்றதாக இருக்கவில்லை. சொற்களைக் கூட்டிப் படிப்பதற்கும் அது உகந்ததாக இல்லை. எனவே, 1928 ஆம் ஆண்டு தேசிய மன்றம் இலத்தின் மொழியின் அடிப்படையில் ஒரு துருக்கி எழுத்துத் தொகுதியை மேற்கொண்டது. பத்தாண்டுகளில் அனைத்து நிலைகளிலும் துருக்கி மொழி, கல்வி மொழியாக்கப்பட்டது.

துருக்கி மொழியை அராபியப் பிடியிலிருந்து விடுவிக்க அரசாங்கம் வாரந்தோறும் துருக்கிச் சொற்பட்டியலை வெளியிட்டுக் கொண்டிருந்தது.

இது போன்ற நடவடிக்கைகளின் மூலம் துருக்கி மொழியினைப் பத்தாண்டுகளில் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் வாழ்வியல் மொழியாகவும் ஆக்கினர் துருக்கி மக்களும் அரசும்.

தமிழ்நாட்டில் மக்கள் மொழி என்னும் நிலையில் தமிழ் கோலோச்சுகிறது என்பதனை மறுக்க முடியாது எனினும் வாழ்வியல் மொழியிலிருந்து தமிழ் மொழி இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் தாழ்விற்கு அரசியல் நிலைக் களங்கள் காரணமாக அமைந்து விடுகின்றன. ஆட்சிப் பீடம் ஏறிய அரசியல் இயக்கங்கள் மொழியின் மூலம் கிடைத்த வளர்ச்சி நிலையினை மொழிக்கு எதிராகவே செயற்படுத்துகின்றன.

சன் தொலைக்காட்சியின் ஒரு பிரிவான வானொலி அமைப்பு சன் எஃப்.எம். ஒலி பரப்புகின்ற பல செய்திகள் தெரிந்தோ தெரியாமலோ தமிழ் மொழிக்குக் கேடு சூழ்வனவாகவே உள்ளன. அது போன்று தமிழ் முரசு என்னும் நாளிதழ் வெளியிடும் செய்திகளும் மொழிக் கலப்பிற்கு மக்களை வழிநடத்திச் செல்வனவாக அமைகின்றன. மேலும், தினகரன் நாளிதழ் குறித்து சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விளம்பரம் சூப்பர்-மா என்னும் தொடரும் தினகரன் இதழில் வெளியிடப்படும் பல செய்திகளும் குங்குமம் இதழுக்காக வெளியிடப்படும் பெஸ்ட் கண்ணா பெஸ்ட் என்னும் தொடரும், தமிழ் மொழியின் கட்டமைப்பினை நிலைகுலையச் செய்வனவாகவே உள்ளன.

பொது நிலையில் நின்று நோக்கும் போது தமிழ் அறிஞர்கள் பல வேளைகளில் தங்கள் மேம்பட்ட போக்காலும், இயலாமையாலும், அரசியல் கட்சிகளின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாலும் அரசியல் இயக்கங்களைப் பகைத்துக் கொள்ள முன் வராமையாலும், தமிழ்க் களத்தினைத் தூய்மைப்படுத்திட முடியவில்லை. மேலும் அடிப்படைக் கல்வியை அறியும் மொழிக்கோட்பாட்டை உணராதாரும் தமிழ் இயக்கத்துள் நுழைந்து மொழிக் காப்பாளர் வேடம் அணிவதும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தடையாகவே அமைகிறது. இந்த இரு நிலைகளையும் புறந்தள்ளியும் வென்றும் தமிழ்க் களத்தினை வலுவுள்ளதாகவும் வளமுள்ளதாகவும் ஆக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த நிலையினைக் காலம் கருதித் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் - தமிழ் அமைப்புகளைப் பலமுள்ளதாக்கப் பல களங்களில் எத்தகைய பாதைகளில் நடைபோட்டதோ அதுபோன்று பயணம் மேற்கொள்ள அர்ப்பணிப்பு உணர்வுடன் முன்வரும். இந்த நிலையில் இடக்கர்கள், புறங்கூறும் புல்லர்களின் உணர்வுகளையும் செயல்களையும் எண்ணத்திலும் செயலிலும் கொண்டு விழிப்புணர்வுடன் நடைபோடும் - அரசியல் நிலைகளைத் தமிழ் மொழிக்கு அரணாக்கிக் கொள்ளவும் எந்த நிலையிலும் அரசியல் உணர்வுகளுக்கு இடங்கொடாமலும் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் நிறம் மாறாத பூவாக என்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

நன்றி : மக்கள் செங்கோல், மார்ச்சு 2006

❊ ❊ ❊

# சங்ககாலத் தமிழகம் கல்வியிற் சிறந்திருந்தது
# 2300 ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டு

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் (தமிழ்ப் பிராமி) எழுத்துப் பொறிப்புப் பெற்ற மூன்று சங்ககால நடுகற்களை முதன்முதலாகத் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர். தமிழகத்தில் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் அமைந்துள்ள புலி மான்கோம்பை என்ற சிற்றூரில் இந்நடுகற்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சிற்றூரான புலிமான்கோம்பை வைகை ஆற்றின் தென்கரையில் வத்தலக்குண்டிலிருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவிலும் ஆண்டிப்பட்டியிலிருந்து 19 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் மிகப் பழமையானவை என்ற பெருமையை இந்நடுகற்கள் தட்டிச் செல்கின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சங்ககால நடுகற்களின் கல்வெட்டுப் பொறிப்பு இதுவரை தமிழகத்தில் கிடைத்த பழந்தமிழ் (தமிழ் பிராமி) கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியதாகும். மூன்றடி உயரமும் ஒன்று முதல் ஒன்றரை அடி அகலமும் கொண்ட இந்நடுகற்கள் நிலத்தில் ஓர் அடி ஆழத்தில் நடப்பட்டிருந்தன. இந்நடுகற்கள் சங்ககாலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகளை உட்கொண்ட ஈமச்சின்னத்தின் ஒரு பகுதியாக நடப்பட்டிருந்ததால் தமிழக வரலாற்றாய்விலும் சங்ககால ஆய்விலும் சிறப்பான இடத்தை இவை பெற்றுத் திகழ்கின்றன. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் நடுகற்கள் தற்பொழுது முதன்முதலாகக் கிடைத்துள்ளதால் சங்க இலக்கிய ஆய்விற்கு ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. இதுகாறும் தமிழகத்தில் சமணர் உறைவிடங்களிலேயே பழந்தமிழ் (தமிழ் பிராமி) கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வரிய கண்டுபிடிப்பின் மூலம் தமிழக மக்கள் பரவலாக எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பது உறுதிப்படுகிறது.

ஈமச்சின்னத்தின் ஒரு பகுதியாகக் காணப்பெற்ற இந்நடுகற்கள் விவசாயத்திற்காக நிலம் பண்படுத்தப் பெற்றபொழுது அப்புறப்படுத்தப்பட்டுக் கிடந்தன. பின், கால ஓட்டத்தில் மண்ணுக்குள் புதையுண்டும் போயின. ஏராளமான முதுமக்கள் தாழிகள் புலிமான்கோம்பையிலும் பரல் உயர் பதுக்கைகள் இவ்வூரின் எதிர்ப்புறம் வைகை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள பூம்பட்டியிலும் காணக்கிடைக்கின்றன. புலிமான்கோம்பைக்குக் கிழக்கே இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தெப்பத்துப்பட்டி என்ற சிற்றூரிலும் ஈமச்சின்னங்கள் காணப்படுவதால் சங்ககாலத்தில் இப்பகுதி சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுகிறது.



கிடைக்கப் பெற்ற மூன்று நடுகற்களுள் ஒன்றில் "கல் பேடு தியன் அந்தவன் கூடல் ஊர் ஆ கோள்" என்ற எழுத்துப் பொறிப்புள்ளது. இதற்கு, கூடல் ஊரில் நடைபெற்ற ஆகோள் பூசலில் உயிர்நீத்த பேடு தியன் அந்தவன் என்பவனுக்கு எடுப்பித்த கல் எனப் பொருள் கொள்ளலாம். ஆ கோள் என்பதற்குப் பகைவரின் பசுக்களைக் கவர்தல் என்று பொருள் கொள்வதால் இது வெட்சிப் பூசலில் (போரில்) ஈடுபட்ட வீரனுக்கு எடுக்கப் பெற்றதாகும். சங்க இலக்கியமான மலைபடுகடாம், "கல்லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்த, கடவுள் ஓங்கிய காடுஏசு கவலை" என்று கூறுகிறது. "எந்தைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர் என்ஐ முன்னின்று கல் நின்றவர்" என்பதும் கவனிக்கத்தக்கது. கல் என்ற சொல் நடுகல்லையே குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ஆகோளைப் பற்றி வரும் தெளிவான முதல் நடுகல் இது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியம் இதனை "ஊர் கொலை ஆகோள் பூசன் மாற்றே" (தொல். 20:3) என்று கூறும்.

அடுத்த நடுகல்லின் முன்பகுதி உடைந்து போய் உள்ளது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட பழந்தமிழ் (தமிழ்ப் பிராமி) வரிவடிவத்தில் எழுதப்பெற்ற இந்நடுகல்லில் இரு வரிகள் காணப்பெறுகின்றன. முதல் வரி "...அன் ஊர் அதன்" என்றும் இரண்டாவது வரியில் "...ன் அன் கல்" என்றும் காணப்பெறுகின்றன.

அடுத்த நடுகல்லில் "வேள் ஊர் பதவன் அவ்வன்" எனக் காணப்பெறுகிறது. இதற்கு வேள் ஊரைச் சார்ந்த

பதவன் அவ்வன் என்பவனுக்கு எடுக்கப்பெற்ற நடுகல் எனப் பொருள் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட மூன்று நடுகற்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது நடுகற்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். ஆகோளைப் பற்றிக் குறிப்பிடும் முதல் நடுகல் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கணக்கில் கொள்ளலாம். உயிரெழுத்துக்களில் தொடங்கும் விகுதிகள் முந்தைய பெயர்ச்சொற்களுடன் இணையும் போது, சேர்த்தெழுதப்படாமல் பிரித்தெழுதப்படுதல் பழமரபு. அதே மரபு இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே இக்கல்வெட்டுகள் மூன்றும் காலத்தால் முற்பட்டவை எனக் கருதலாம். தொல்லெழுத்தியல், எழுத்தமைப்பியல் மற்றும் மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கல்வெட்டுகள் காலத்தால் முந்தியவை.

நடுகற்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சங்ககாலப் புலவர்கள் இவற்றை வியந்து கூறியுள்ளனர். தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம், ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் நடுகற்களைப் பற்றியும் அவற்றில் காணப்பெறும் எழுத்துக்களைப் பற்றியும் சிறப்புறக் கூறுகின்றன. சீத்தலைச்சாத்தனார், "விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர், எழுத்துடை நடுகல்" (அகம்:53) எனவும் ஓதலாந்தையார், "விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர், எழுத்துடை நடுகல்" (ஐங்குறுநூறு:352) எனவும், மதுரை மருதன் இளநாகனார், பேஎம் முதிர் நடுகல், பெயர் பயம் படரத்தோன்று பெயரும் குயில் எழுத்து (அகம்:297), மரம்கோள் உமண்மகன் பெயரும் பருதிப், புன்தலை சிதைத்த வன்தலை நடுகல், கண்ணி வாடிய மண்ணா மருங்குல், கூர் உளி குயின்ற கோடுமாய் எழுத்து (அகம்:343) எனவும் குறிப்பிடுகின்றன. இக்குறிப்புகள் அனைத்தும் சங்க காலத்தில் எழுப்பப் பெற்ற நடுகற்களில் எழுத்துகள் இருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன. இப்போது கிடைத்துள்ள சங்ககால நடுகற்கள் மூலம் முதன் முறையாக இவ்வுண்மை உறுதிப்படுத்தப் பெறுகிறது.

இந்நடுகல்லின் ஒளிப்படத்தைப் பார்வையுற்ற மூத்த கல்வெட்டறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் பின்வருமாறு கருத்துரைத்தார்: "எழுத்தமைதியின் அடிப்படையில் இந்நடுகற்கள் மாங்குளம் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களை ஒத்திருப்பதால் இவற்றின் காலத்தை கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திற்கு முன்பாக எடுத்துச் செல்லலாம்; இந்தியாவில் கிடைத்த நடுகற்களில் காலத்தால் முந்தைய நடுகற்கள் என்ற பெருமையை இந்நடுகற்கள் பெறுகின்றன; தமிழகத்தில் கிடைத்த தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்களின் கலப்பின்றித் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டு எழுதப் பெற்றுள்ளன; சங்க காலத்தில் தமிழகம் முழுவதும் கல்வி அறிவைப் பெற்றுத் திகழ்ந்திருந்ததை இக்கண்டுபிடிப்பு உணர்த்துகின்றன."

இந்நடுகற்களைப் படித்துணர்வதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் உறுப்பினரும் ஆன பேராசிரியர் எ. சுப்பராயலு அவர்கள் பெரிதும் துணைபுரிந்தார். முன்னாள் கல்வெட்டியல் துறைத்தலைவர் பேராசிரியர் செ. இராசு அவர்கள் இலக்கியச் சான்றுகளை அளித்துதவினார். மத்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த முனைவர் சு. இராசவேலு, டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்தின் இயக்குனர் முனைவர் இரா. கலைக்கோவன், அரியலூர் அரசினர் கலைக்கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் இல. தியாகராஜன் மற்றும் மு. நளினி போன்றோர் கல்வெட்டுக்களைக் கண்ணுற்று இக்கண்டுபிடிப்பை நிகழ்த்திய ஆய்வுக்குழுவைப் பாராட்டினர்.

இந்நடுகற்கள் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையின் தலைவர் முனைவர் கா. ராஜன் தலைமையில் இயங்கிய ஆய்வாளர்கள் திரு. வி.பி. யதீஸ்குமார் மற்றும் திரு. சி. செல்வகுமார் ஆகியோர் கள ஆய்வில் கண்டுபிடித்தனர். ஆய்வாளர் முனைவர் மா. பவானி மற்றும் திரு. ச. வெங்கடாசலம் ஆகியோர் நடுகற்கள் கிடைத்த இடத்திற்கு வந்து கல்வெட்டுக்களைப் படிக்க உதவி புரிந்தனர்.

**தமிழ்ப் பல்கலைக்கழக செய்தி வெளியீடு**

Printed by Mrs. Thulasimani Mariappan and Published by Dr. Guruswami Siddhan on behalf of Devendra Kula Velalar Sangham and Printed at Maa Mannar Achakam, 10/2A, Nalvar Nagar, Coimbatore - 641 046 and published at 10/2, Nalvar Nagar, Coimbatore - 641 046. Editor : Dr. Guruswami Siddhan

செய்தித்தாளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழக அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் 10 & 11 தேதிகளில் சேர்க்கப்படுகிறது.

அனுப்புநர் :

**பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,**
ஆசிரியர், மள்ளர் மலர், 10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.

பெறுநர்:

உயர்திரு

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .